சிவமயம்.

தமிழன்

ஒரு மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

"தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்"
'எண்ணித்துணிக கருமம்'
"எவ்வ துறைவ துலக முலகத்தோ-
டவ்வ துறைவ தறிவு"

C. N. அனந்தராமையை சாஸ்திரி M. A., பண்டிதர் S. முத்துசுவாமிப் பிள்ளை, பத்திராதிபர்கள்.

தொகுதி V. } 1092 பங்குனி: திருவனந்தபுரம்: APRIL 1917. { பகுதி 2.

பொருள் அடக்கம்.

	விஷயம்.	பக்கம்.
1.	மாதசரிதம்	22
2.	மதிப்புரைகள்	23
3.	Some mistakes in Grammar	24
4.	தமிழின் பழமை ...	25
5.	நாஞ்சினாட்டு மருமக்கள்வழி மான்மியம்	27
6.	Madras War Fund Stamps	30
7.	மனக்குரங்கு (ஒரு சிறுகதை)	31
8.	சித்திரை திருநாள் திருவிழாப்பாடல்கள்	36
9.	உத்தரராம சரிதம் ...	37
10.	பலபல குறிப்புகள் ...	40

சந்தா விவரம்.

இந்தியா இலங்கை இரங்கூன்	ரூ.	2
வெளிநாடுகளுக்கு	ரூ.	3

குறிப்பு:—சந்தாத்தொகை எப்பொழுதும் முன்னதாகவே செலுத்தப்படவேண்டும்.

T. Nagasubramania Rao Bros,
MANAGING PUBLISHERS, TIRVANDRUM.

THE "TAMILIAN"

A Monthly Anglo Tamil Journal.

FOR

the Educated and the Masses, Women and Children

Annual Subscription Rs 2.

Strictly payable in advance.

SHORT STORIES: a specialty.

The best Medium for advertisement.

Advertisement rates.

Full page or 2 columns	Rs.	5—0—0
Half page or 1 column	,,	3—0—0
Quarter page or ½ column	,,	2—0—0

Contract rates on application.

All literary communications, books for review etc, should be addressed to Mr C. N. Ananta Ramaiya Sastri, M. A. Editor, The "Tamilian," Trivandrum; all orders, remittances, advertisements etc.,

To, Messrs. T. NAGASUBRAMANIA RAO BROS,
Managing Proprietors,
THE "TAMILIAN"
Trivandrum.

மாதசரிதம்

அல்லது

பத்திராதிபக்கூற்று.

வருகிற புரட்டாசிமீ 8-உ அன்று நமது மன்னர் பெருமானாகிய ஸ்ரீமூலம் திருநாள் திருமேனிக்கு அறுபது திருவயது பூர்த்தியாகின்றது. அந்நன்னாளை எவ்வாறு கொண்டாடி மகிழவேண்டுமெனபதைப்பற்றி, சென்ற கன்னிமாதத்தில் அப்புண்ணியமூர்த்திக்கு 59 திருவயது நிறைவான நாள்முதல் திருவிதாங்கோட்டாரெல்லாம் ஆலோசிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். மூவேலிக்கரையில் இந்த ஷஷ்டியப்தபூர்த்தி ஞாபகச்சின்னமாக ஒரு இரண்டாவது வகுப்புக் கலாசாலை ஸ்தாபனம் செய்வதற்கு வேண்டிய முயற்சிகள் செய்யப்பட்டுவருவதும் நம்மவர்கள் அறிந்த விஷயமே.

திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் எந்தப்பாகத்தைப்பார்த்தாலும் இதைப்பற்றிய பேச்சேயொழிய வேறில்லை. இதற்கெல்லாம காரணமென்ன? நமது ஸ்ரீமூலப்பெருமானது செங்கோன் முறைமையும் இந்நாட்டாரது ஒப்பற்ற ராஜபக்தியுமேயாம். அரசனே காணுந் தெய்வமென்பது இந்துமதத்தார் கொள்கை. குடிகளின் க்ஷேமத்தையே தலைமையான தனது ஜீவித நோக்கமாகக்கொண்டு சென்ற 31 வருஷகாலமாகச செங்கோல் செலுத்திவரும் நம்மரசர்திலகரது ஷஷ்டியப்தபூர்த்தி மஹோற்சவத்தை இவ்வளவு ஆவலோடு எதிர்பார்ப்பது ஒரு சிறிதும் ஆச்சரியமல்ல. சென்ற 133 வருஷங்களுக்கிடையில் இதுபோன்ற மஹோற்சவத்தை இந்நாட்டார் அறிந்ததே இல்லை. திருவிதாங்கோட்டரசர்களில் 933-ஆம் ஆண்டு அரசுகட்டில் ஏறின, வடமொழியிலும் மலையாளத்திலும் கவித்திறன் பெற்றிருந்த மஹாராஜா அவர்கள் மட்டுமே ஷஷ்டியப்தபூர்த்தி விழாக் கொண்டாடியிருக்கிறார்கள். ஆகவே நமது திருமூலபூபதியின் ஷஷ்டியப்தபூர்த்தி மங்கள விழாவைப்பார்க்க நேர்ந்திருக்கிற நம்மவரின் பாக்கியமே பெரும்பாக்கியம். இதுவிஷயமாக வேண்டிய ஆலோசனை செய்யும்பொருட்டு சென்ற 15-உ புதன்கிழமையன்று நமது திவான்ஜீயவர்களின் அவைத்தலைமையின்கீழ் 'விக்டோரியாஜுபிலி டௌன்ஹாலில்' ஒரு பொதுஜனசபை கூடிற்று. அதன் பயனாக ஒரு சென்றல் கம்மிற்றி ஏற்படுத்தப்பட்டதோடு பணவசூலுக்காகக் கையொப்பமும் வாங்கப் பட்டது. அந்த நாளில் தானே 10,000 ரூபாய்க்குமேல் கையொப்பமும் ஆயிற்று. நம்மவர்கள் வாய்ப்பேச்சு எவ்வளவு நீளம் வேண்டுமோ அவ்வளவும் பேசுவார்கள்; ஆனால் பணவிஷயத்தில் வந்தால் மட்டும் கை குறுகிவிடும். எனினும் இவ்விஷயத்தில் நம்மவர்கள் வெகு உதாரசிந்தையோடிருக்கிறார்கள் என்பதற்கு முதல் நாளிற்றானே கையொப்பமான இப்பெருந்தொகையே போதுமான அத்தாட்சி. இக்கொண்டாட்டம் இன்ன விதமாக இருக்க வேண்டுமென்று இன்னும் திட்டஞ்செய்யப்படவில்லை. தகுதியுடையவர்கள் சென்றல் கம்மிற்றி மெம்பர்களாக இருப்பதால் இந்த அபூர்வ சமயத்தின் பெருமைக்குத்தக்கவாறு அது நடத்தப்படுமென்று நமக்கு உறுதியாக நம்பலாம். தெய்வத்திருவருளால் நமது ஸ்ரீபூபதியின் சதாபிஷேக மஹோத்ஸவத்தையும் கொண்டாடும் பாக்கியம் நம்மவர்களுக்கு உண்டாகுமாறாகுக!

* * *

தற்காலத்தில் மலையாளமும் தமிழும் தனிப்பாஷைகளாக நிற்கின்றன. ஆரம்பத்தில் இரண்டும் ஒன்றாகவே இருந்தது. தமிழில் காவியங்கள் தோன்றிய 5-வது நூற்றாண்டுவரை இரண்டு பாஷைகளும் ஒன்றாகவே இருந்தனவென்பதற்குச் சேரநாட்டு இளவரசராகிய இளங்கோவடிகள்யாத்த சிலப்பதிகாரம் என்னும் செந்தமிழ் நூலே சிறந்த திருஷ்டாந்தமாம். பிற்காலத்து சேரமன்னர்களுடைய ஆட்சி மலைநாட்டில் மட்டும் நிலைபெறவும், சோழபாண்டிய மன்னர்களின் நாடு பல்லவர், நாயக்கர், மகமதியர் முதலிய பிற அரசர் ஆணைக்கடங்கவும் நேர்ந்தகாலத்து, தமிழரும் மலையாளரும் முன்னையப்போல் கலந்துறவாட வசதியின்றிப் பிரிவுபட்டனர். பிறகு மலையாளர் ஆரிய நம்பூரிகளோடு பழகவும் அவர்களது வடமொழியைக் கற்கவும் தலைப்பட்டனர். அந்நாள் முதல் மலையாளத்தில் வழங்கிவந்த பழந்தமிழோடு வடமொழிச் சொற்கள் அதிகமாகக் கலக்கத்தொடங்கி மலையாள பாஷை பூர்வநிலை திரிந்தது. இந் நிலைமாற்றமும் வெகுகாலத்துக்கு முன் நிகழ்ந்ததாகத் தோற்றவில்லை. மலையாள காவியத்தில் மிகவும் பழமையானதாகக் கருதப்படுவதும், 400, 500 வருஷங்களுக்குமுன் எழுதப்பட்டதாக ஊகிக்கப்படுவதுமான ராமசரிதத்திலுள்ள

கீழ்வரும் கவியின் போக்கை மட்டும் உற்றுநோக்கு வோர்க்கு இரண்டு பாஷைகளிலுமுள்ள நூல்களின ஒற்றுமை இனிது விளங்கும்.

உரைப்புகழ்த் தொழில்களெல்லாமொன் றுரை
னறிக வல்லேன்
தரிபெழுமியக்கர் சித்தர் தானவர்
வானோர் மேவந்தா
ஒருத்தராரிவரில் நின்னோடோடுவ
தொழிந்து போரில்
கருத்தராய் நின்றுயிர்த்தோர் கழிந்தா
ளரக்கர் வீரா!

ஆகவே இவ்வாறு பூர்வபந்தமுடைய இரண்டு மொழிகளையும் மலையாளர் தமிழர் ஆகிய இருவகுப் பாரும் பரஸ்பரம் கற்கவேண்டுமென்பதே இக்குறிப் பின் தலைமையான நோக்கம். மலையாளபாஷையில் தேர்ச்சியடைந்து உயர்தரக் கலாசாலைப் பட்டம் பெற்ற எத்தனையோ தமிழர்கள் இருக்கிறார்கள். ராஜபாஷையாயிருப்பது பற்றி திருவிதாங்கோட்டுத் தமிழரும் மலையாளம் கற்றே வருகிறார்கள். ஆனால் மலையாளர் மட்டும் அதிகமாத் தமிழ் கற்கத்தொடங் குவதில்லை. திவான் பகதூர் கோவிந்தப் பிள்ளையவர் கள் தமிழறிந்ததின் பயனாகத் திருக்குறளை மலையா ளத்தில் மொழி பெயர்த்திருக்கிறார்கள். சென்னை ஸ்ரீ சண்முகானந்த தமிழ் நாடகக்கம்பெனியின் சொந்தக் காரராகவுள்ள P. வேலுநாயரவர்கள், தமிழர்களும் தலைகுனியத்தக்க சொல் வன்மையோடு, சிறிதள வேனும் "கொச்சை"யின்றித் தமிழ்ப் பேசும் சக்தி யுடையவராயிருக்கின்றனர். பிரசித்த நாவல்லவரான S. K. நாயரவர்களும், தமிழர்களும் கேட்டு மெச்சு மாறு தமிழ்ப் பேசுகிறார்கள். ஆகவே 'மனமட்டு முண்டானால் மலையாளருக்கும் தமிழில் பயிற்சிய டையமுடியும். தமிழ்ப் பயிற்சியினால், மலையாளபா ஷையின் பூர்வ நிலைமையும், மலையாள பதங்களின் முதன் மொழியும் மிகத் தெளிதின் விளங்குமாகை யால் மலையாளர்கள் தமிழ் வசன நூல்களையாவது கற் கத்தொடங்குவார்கள் என்று நம்புகின்றது. மலையாளத்திலும் சிறு கதைகளும் சாஸ்திர நூல களும, நாவல்களும் அதிகமாக வெளிவருகின்றன. இடவிரிவுடைய தமிழ் நாட்டிலும் இதுபோன்ற நூல் கள் மிகவும் அதிகமாகப் பிரசுரிக்கப்படுகின்றன. ஆதலால் மலையாள நாட்டார் தமிழ்வசன நூல்களை வாசிக்கத்தொடங்கினால் மேனாட்டுக்கல்வி, சாமானிய ஜனங்களுக்கிடையில் அதிகம் பரவ இடமுண்டென்று சொல்லாமலே விளங்கும்.

சென்னையில் மூன்று முதல் வகுப்புக் கலாசாலை கள் இருந்தும், B. A. க்குத் தமிழ் படிப்பதற்கு வச தியான ஆறாவது வகுப்பு (Group) ள்ள கலாசாலைகள் இல்லாமலிருப்பது தமிழுலகத்துக்கே மிகவும் இழுக் கான ஒரு விஷயம். ஆகையால் முதல் வகுப்புக் கலாசாலையாகப் போகும் மதுரைக் காலேஜிலாவது மேற்படி வகுப்பு ஏற்படுத்தப்பட வேண்டுமென்பதே எமது நோக்கம். இதற்கு முச்சங்கங்கள் நிலைபெற்று தமிழ்மொழிவளர்த்த மதுரையைப்பார்க்கிலும் சிறந்த இடமும வேறுளதோ. மதுரைக் கலாசாலைக்குப் பொருளுதவி செய்யும் வள்ளல்பெருமானாகிய அண் ணாமலை செட்டியாரவர்கள் இவ்விஷயத்தைக் கவனி த்து வேண்டியன செய்வார்களானால் அவர்கள் பெயர் தமிழுலகத்தில் தலைமைபெற்று விளங்குமென்பதற்கு ஐயமே இல்லை.

'The History of Caste in India' என்னும் ஆங்கிலநூலும் வேறு சில கிரந்தங்களும் எழுதியுள்ள டாக்டர் ஸ்ரீதரகெல்க்கார் M. A; Ph. D. என்பவர் "மகாராஷ்டிரீய ஞானகோச மண்டலம்" என்னும் பெயருடைய ஒரு ஆப்பீசிலிருந்து, இந்தியாவைத் தழுவிய சகல அறிவுகளும அடங்கின ஒரு நூலை (Encylopedia) மகாராஷ்டிர பாஷையில் வெளியிட உத்தேசித்திருப்பதாயறிந்து மிகவும் சந்தோஷிக்கி றோம்.

மதிப்புரைகள்.

மஹான் முஹம்மத் நபி அவர்களின் உபதேசரத்நம். இந்நூல் M. A. மணிக் ஸாஹிபவர்களால் எழுதப் பட்டு, சென்னை நவீன கதாபுஸ்தகசாலையாரால் வெளி யிடப்பட்டது. சர்வசமய ஸமரஸபாவனை மிகுந்து வருமிக்காலத்தில், உலகத்தின் நானு பாகங்களிலு முள்ள 41 கோடி ஜனங்களுக்கு மன அமைதியைக் கொடுத்துவரும மகமது மதத்தைப் பற்றிய ஞான மும் தமிழர்கள அடையவேண்டியது மிக அவசியமே. பிறசமயதூஷணைகள் சிறிதேனும் இல்லாமலும், இஸ் லாம் மதச் சிறப்புகளைச் செவ்வையாக விளக்கியும், யாவரும் எளிதில் உணரத்தக்க எளிய செந்தமிழ் நடையில் இந்நூலை எழுதிய ஸ்ரீமான் மணிக் சாகிபவர்

களுக்குத் தமிழுலகம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றது. இடையிடையே சில அச்சுப்பிழைகளும், தமிழ் வழக்குக்குப் பொருத்தமல்லாத பல மொழிகளும் காணப்படுகின்றனவேனும், அக்குறைபாடுகள் இரண்டாம் பதிப்பில் நீங்கிவிடுமெனத் திருப்தியடைகின்றோம். இதன் விலை அணா 10. வேண்டுவோர் சென்னை அல்லது இரங்கூனிலுள்ள 'நவீன கதாபுஸ்தகசாலை' மானேஜருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

பத்திரிகைகள். கல்வி, கற்பகம் என்னும் தமிழ்ப் பத்திரிகைகளையும், தேசாபிமானி, மலையாளி, பிரபுத்தகேரளம், பாஷாபோஷிணி, சத்தியநாதம் என்னும் மலையாளப் பத்திரிகைகளையும் வந்தனத்துடன் வரப் பெற்றோம். அவற்றுள் 'கல்வி' மதுரையிலிருந்து வெளிவரும் ஒரு புதுத் தமிழ்ப் பத்திரிகை. இதில் வாசிக்கத்தக்க அநேக இனிமையான விஷயங்களும், சித்திரங்களும் அடங்கியிருக்கின்றன. வருஷச்சந்தா, ரூ 1. வேண்டுவோர் அதன் உடமையாளரான S. நாகராஜய்யரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

கற்பகம் இது புதுச்சேரியிலிருந்து வெளியாகின்றது. வருஷ சந்தா ரூ 1.

மலையாளப் பத்திரிகைகளெல்லாம் வெகுநாளாய் நடைபெற்றுவரும் பிரபல பத்திரிகைகள் ஆகையால் அவைகளைப்பற்றி நாம் விசேஷமாக ஒன்றும் எடுத்துக் கூறவேண்டிய அவசியமில்லையென்று நினைக்கிறோம்.

Some mistakes in Grammar.

C. N. A. Ramayya Sastri Esq. M. A.

It is usual to say that ஆநின்று in செய்யாநின்றான் is an இடைநிலை. I am sure that செய்யாநின்றான் is equivalent to செய்யாய் நின்றான் which finds a place in old Malayalam works; செய்யா is used in the sense செய்து in Tamil classical works and there also it is equivalent to செய்யாய். செய்யாநின்றான் literally means stood in the line of doing, and செய்யாய், being doing. To call ஆநின்று an இடைநிலை, will be seen to be absurd when we see other rarer forms like செய்யாநிற்பன் and செய்யாநிற்கின்றான். Though செய்யாநின்றான் should properly denote the past tense, it is used to signify the present tense.

A second mistake in Tamil grammar is the considering of both ஆல் and ஒடு as terminations of one and the same case. They differ in origin as well as in signification. The error crept into Tamil Grammar for the *only reason that* the Sanskrit form for words of both these terminations is one and the same. The term பதவியல் with the Sanskrit word പദം is supposed to be used in Nannul for etymology to show that Sanskrit Grammar has been greatly helpful in writing this portion of the Tamil grammar. But nowhere has the imitation of Sanskrit Grammar affected propriety so much as in the Third Case.

I propose retaining ஒடு for the third case, calling ஆல் as the eighth one, and either make the present eighth case a branch of the first case as in Sanskrit, or better still, dub it the Nineth case. A similar reform was first adopted in *Malayalam Grammar* by Mattan Geevarghese and given to the world with reasons by Mr. A. R. Rajaraja Varma M. A. in his Keralapaniniyam,

:o:

"TWO PERFUMERY SPECIALITIES"

CHARMING LATEST S. T. A. NOVELTIES.

Perfume No. 24:—A very pleasant perfume resembles the aroma of a cool breeze passing through a flower garden. Packed in 1/2 Dr. elongated stoppered bottles with nickel caps, Rs 3 each

Perfume No. 27:—An entirely new perfume. Sweetest of odours. Finely refreshing and distinctly floral in character. True to nature. Packed in 1/2 Dr elongated stoppered bottles with nickel caps, Rs 2 each.

N B. Special offer:—In order to popularize the above 2 novelties and to serve as samples, either one or both of the 2 perfumes will be supplied at half price; viz. Perfume No. 24 for Rs. 1—8—0 and perfume No. 27 for Re. 1. *This concession being applicable only once.* If both the perfumes are ordered at a time, our art perpetual calendar (printed in London) which is sold at As 10 each will be supplied free. Forwarding charges extra in all cases.

As only a limited number of bottles are reserved for samples at half price, it is requested that orders might be placed immediately to avoid disappointment.

Apply to-(Mentioning the name of the "Tamilian")

THE STAR TRADING ASSOCIATION,

Perfumery Specialists,

Bangalore City.

தமிழின் பழமை.

ஸ்ரீமாந் C. N. அநந்தராமய்ய சாஸ்திரியவர்கள் M. A.

தமிழ் மொழிகளிற் காணும் விகுதி முதலியவைகளால் தமிழின் பழமையை விளக்கி யான் சென்னைத் தமிழ் "அகாடமி" என்னும் புலவர் கூட்டத்தின் வேண்டுகோளின்படி திவான் பகதூர் P. இராஜகோபாலாசாரியர் B. A., B. L., C. I. E. அவர்கள் தலைமையின்கீழ், பச்சையப்பன் கலாசாலை ஹாலில் சென்ற டிஸம்பர் 31-வ தமிழில் ஓர் பிரசங்கம் செய்தேன். அப்பிரசங்கத்தின் சுருக்கத்தைத் தமிழன் வாயிலாக வெளியிடுகிறேன்.

இலக்கியங்களினுடையவும் இலக்கணங்களினுடையவும்பழமை பாராட்டில் தெலுங்கும் கன்னடமும் மட்டுமல்ல, ஸம்ஸ்கிருதம் தவிர வடதேசத்து இக்காலத்தில் வழங்கும் பாஷைகளும் தமிழுக்கு நிகரில்லை; நாகரிகத்திலும் கடவுள் விஷயத்திலும் ஸம்ஸ்கிருதத்திலிருந்து கிடைக்கவேண்டும் நன்மை மற்றப்பாஷைகளைப்போலவே தமிழும் பெற்றிருப்பதுடன் ஸம்ஸ்கிருதத்தை யொட்டாதபடியுள்ள பெருமைகள் ஏனைய பாஷைகளைவிடத் தமிழிற் றங்கியுள, பதங்களோ சுதந்தரமாகத் தமிழிலுள்ளது போல வேறு திராவிட பாஷைகளிற் செழித்திருக்கவில்லை. ஆங்காங்குள்ள இசை வேற்றுமைகளாலுள்ள மாறுதலன்றி தெலுங்கிலாவது கன்னடத்திலாவது கூறத்தகுந்த பேதங்கள் இல்லை. இவ்வாறுள்ள மாறுபாடுகள் துளு, குடகு முதலிய இலக்கியமற்ற பாஷைகளிற்கூட மிகுதியாய் இருக்கின்றன. இப்பேதங்களால் அமைவது இந்தப் பாஷைகளெல்லாம் வெகு காலத்திற்கு முன்னரே தமிழிலிருந்துபிரிந்துள்ளன என்பதுமட்டுமாம். திராவிட பாஷைகளில் நாகரிக முள்ளவைகளுக்கெல்லாம் ஒரு காலத்துத் தமிழ் என்று பெயர்வழங்கியிருந்ததென்றுகூடத் தோன்றுகிறது. பிற்பட சங்கீதத்துக்கு ஏற்றபடி எழுத்தமைப்புகள் பொருந்திவந்ததனால் தெனுகு—இனிய பாஷை—தெனுகு (தெலுங்கு) எனவும், நாட்டின் நிலைமைபற்றி கருநாடகம்—கர்ணாடகம், மலையாளம் எனவும் பெயர்கள் விளங்கின. தமிழ் என்றால்-தமது என்னும் பொருள் மட்டும் கூறவேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது. புகுவது புகழ். தமது தமிழ். அழ், இழ் இரண்டும் ஒரேவிதமான விகுதி.

டாக்டர் கால்ட்வெல் என்னும் நுண்ணிய அறிவாளர் தமிழைவிடப் பழைய சில விகுதிகள் கன்னடத்திலும் தெலுங்கிலும் இருக்கின்றனவெனப் பிரமித்து "கன்னடமும் களி தெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும்" பழைய தமிழிலிருந்து தோன்றினவென்னும் அபிப்பிராயத்தை ஆராய்ந்து விட்டுவிடுகிறார். இரண்டாம் வேற்றுமையின் உருபுகளில்பழைய கன்னடத்திலுள்ள "அம" என்பதே தமிழிலுள்ள "ஐ"யை விடப்பழையதென்கிறார். ஆனால் "அம்" "ஐ" இவ்விரண்டும் அஃறிணை விகுதிகளென்றும அஃறிணை விகுதி இரண்டாம் வேற்றுமை விகுதியாகின்றதென்றும் "அம்" பழைய கன்னடத்திலும் "ஐ" தமிழிலும் அவ்வாறாயிற்றென்றும் எனது ஆராய்ச்சியால் யான் தெரிந்துகொண்டேன். அவ்வாறே "அவள்" என்பதற்குத் தெலுங்கில் "அதி" என்பதுபற்றி, தெலுங்கிலுள்ள "சின்னதி" எனபதுபோலவே கன்னடத்திலுள்ள "அரசிதி" என்பதும் தமிழிலுள்ள "வேளாளத்தி" என்பதும் தெலுங்கை ஒட்டிவந்ததென்றார். ஆனால் அல்(அள்), து (தி)இவை இரண்டும் முதலில் அஃறிணை விகுதிகள். மூன்றும் வேற்றுமையின் சொலலுருபாகிய 'உடன்' என்பது கன்னடத்திலிருப்பதான 'ஒடன்' என்பதன் திரிபென்பதே எனது அபிப்பிராயம். உட் என்னும் வினையடியில் அன் என்னும் அஃறிணை விகுதி அமைந்ததே உடன். அன் என்பதுபோல அல் சேர்ந்து உடலும் ஐ சேர்ந்து உடையும் ஏற்படுகின்றன. இவ்வுடைக்கு மூன்று பொருளும் கிடைக்கின்றது. ஐ சேர்ந்தும் வினையடியேயாகிறேல் எனவும், அவ்வாறே பங்கெனும்படி ஆறும் வேற்றுமையாகவும், பங்கு அல்லது சொத்து என்னும் அர்த்தம் திரிந்து வஸ்திரம் எனவும் பொருள்கள். பங்கு அல்லது சொத்து என்னும் அர்த்தத்தில் உள்ள உடைமை என்பது *ஆபரணம் என்னும் அர்த்தத்தில் வழங்குவதும்; கவனிக்கத்தக்கது. உடல் உயிரின் பங்காயிருப்பதுடன் உடைந்துபோவது மாதலால் அம்மொழியின் பொருத்தம் கூறவும் வேண்டுமோ? உடலுக்கு உடலம் என்பது அல், அம் இரண்டும் சேருவதனால்; செய்தல் என்பதில் வினையெச்சத்துக்குக் காரணமான செய்து என்னும் வழக்கிறந்த தொழிற் பெயருடன் அல்விகுதி கூட இணைவதுபோல. உடம்பு என்பதோ அம்,பு

என்னும் இரண்டு அஃறிணை விகுதிகளும் புகுந்தது. கடம் கடன் ஆவதுபோலவே உடம் என்பதே உடன் எனவாயிற்று. டாக்டர் கால்ட்வெல் கன்னடத்தின் கண் உள்ள ஒடன் என்பது தமிழில் உடன் என்றாயிற்றென்றார். இதை யான் ஒப்பவில்லை. "முதல்" கன்னடத்தில் "மொதல்" ஆனதுபோல "உடன்" "ஒடன்" ஆயிற்றென்பது எனது கொள்கை. நாலாம் வேற்றுமையின் உருபாகிய "கு" என்பது ஆய்தம் சேர்ந்த குற்றியலுகரம் என்பதே என் கொள்கை. அவர்க்கு என்பது அவர்ஃஉ என்பதாம். இது மலையாளத்திலும் அவக்கு என்றே இருக்கிறது. ஆயினும் ஆய்தம் சேராத "அவஃ" என்பது மலையாளத்தில்லாது தமிழில் இல்லை. "அவன்கு" என்பதில் 'க'கரம் போய் "அவனு" என்பதாயிற்றென்று கேரளபாணினீயத்திற் கூறியிருப்பதைவிட்டு இது ஆய்தம் சேராத நான்காம வேற்றுமை என எண்ணுவது நியாயமெனத் தோன்றுகிறது. இலக்கணத்தில் இவ்வேற்றுமைக்கு மலையாளத்தில் உருபு கூறும்பொழுது "கு" "உ" இரண்டும் கூறவேண்டும். ஆய்தத்தைப் பற்றின ஆராய்ச்சி யான் எளியேனாயினும் எவ்வளவோ செய்திருக்கிறேன். அது யாரும் இதற்குமுன் செய்ததுமன்று. தமிழிலும் மலையாளத்திலும் "க"கரமாகவும் தெலுங்கு கன்னடங்களில் பெரும்பாலும் "ഗ" எனவும் காணும் உறுப்புக்கு இவ்வாய்தம் எவ்வளவு ஸாதகமாயிருக்கிறதென்று யான் கண்டுபிடித்திருப்பதைத் தள்ளமுடியாதபடி அது செழித்தோங்கியுளது. இவ்வாய்தமும் "ழ"கரமும் இருக்குங்கால் தமிழின் பழமையை நம்பாதவர்களை நம்பும்படிச் செய்யலாம். "தாடி" என்பது "தாழ்து" என்பது திரிந்ததென்று யான் கூறுவேன். "மாடு" என்பது "மாழ்து" என்னவும் செய்யலாம். இவ்வாறு "த"கரம் சேராதிருக்கும்போதும் "ழ"கரம் "ட"கரமுதலியனவாய் தெலுங்கு முதலியவற்றில் மாறுகின்றது. "தமிழ்" என்னும் சொல் "தமிட்" எனவாய் பழையகாலத்தே வடமொழியில் ദ്രമിഡ, ദ്രവിഡ, ദ്രാവിഡ எனப் பலவாறாய்த் திரிந்ததையும் பார்ப்போம். த்ரவிட என்பது தமிழ் என்றாயிற்றென்னும் கால்ட்வெல்லின் அபிப்பிராயத்துக்கு நியாயம் போதாது.

(தொடரும்.)

சாலையில் ஒரு தமிழ்ப் பள்ளிக்கூடத்தின் தேவை.

போனமாதத்தில் நடைபெற்ற திருவிதாங்கூர் ஸ்ரீமூலம் பிரஜாசபையின் பதின்மூன்றாவது கூட்டத்தில், சாலை வியாபாரிகளின் பிரதிநிதியான ஸ்ரீமான் S. VE. A. பாலசுப்பிரமணியன் பண்டாரம் அவர்கள், சாலையில் ஒரு தமிழ்ப் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கவேண்டிய அவசியத்தைப் பற்றிப் பேசிய விஷயங்களைக் கீழே சேர்த்திருக்கின்றோம். தேசபாஷை வித்தியாப்பியாசச் சீர்திருத்த விஷயத்தில் மிகக் கவலைபெடுத்து வரும் நமது திவான், திவான் பகதூர் M. கிருஷ்ணன் நாயரவர்கள் இவ்விஷயத்தைக் கருணையோடு ஆலோசித்து, ஒரு அநுகூலமான முடிவுசெய்வார்களென்று பூர்ணமாக நம்புகிறோம்—பத்திராதிபர் S. M.

"திருவனந்தபுரம் பட்டணத்தில் சாலை தமிழர்கள் மிகுதியாக வசித்துவரும் ஒரு இடம். சாலை அஞ்சலாப்பீசுமுதல் கிள்ளிப்பாலம்வரை சாலைப் "பஜார் ரோட்டி"ன் இருபக்கமும் சுமார் ஒரு மைல் தெற்கும் வடக்கும் உள்ளிட்ட சர்கத்தில் சுமார் 300 வியாபாரிகளும் 30,000 ஜனங்களும் வசித்துவருகிறார்கள். இவர்கள் எல்லாம் பிறவித் தமிழர்கள். வியாபாரிகளின் கணக்குகளும் வெளிநாட்டு உள்நாட்டு எழுத்துகளும் தமிழே. அன்றியும் ஒரு ஜனசமூகத்தின் பிரதம உயர்தரக் கல்வியெல்லாம் அதன் தாய்ப்பாஷை மூலமாகவே கற்பிக்கப்பட வேண்டுமென்ற கொள்கை உறுதிபெற்றுவரும் இக்காலத்தில் சாலைத் தமிழர்களுக்கு பிரதமக் கல்வியாவது அவர்களின் தாய்ப்பாஷையான தமிழ்மூலம் கற்பிக்கப்பட வேண்டுமென்பதை மறுக்க ஒருவரும் துணியார்கள். இப்பொழுது தமிழைச் சரியாகக் கற்றுக்கொடுக்கத்தக்க தமிழ்ப் பள்ளிக்கூடம் இல்லாததனால் தமிழர்கள் அநுபவித்துவரும் கஷ்டங்கள் கொஞ்சமல்ல. ஆகையால் சாலையில் ஒரு ஹையர்கிரேட் எலிமென்டரித் தமிழ் பாடசாலை ஏற்படுத்தித் தரவேண்டுமென விநயபூர்வம் விண்ணப்பம் செய்து கொள்ளுகிறேன்.

அங்ஙனம் ஸ்தாபிக்கப்படுமானால் தமிழர்களுக்கு மட்டுமன்றி, சாலைப்பக்கமுள்ள மலையாளிச் சகோதரர்களுக்குங்கூட உபயோகமாகுமென்று இந்த சந்தர்ப்பத்தில தெரிவிக்கிறேன். எப்படியென்றால், இப்

பொழுது மலையாளிச சகோதரர்கள் சாதாரணமாக வியாபாரத்தில் கவனம் செலுத்துகிறதில்லை. அதற்குள்ள பலகாரணங்களில், அவர்களுக்குத் தமிழ்ப் பயிற்சி இல்லாமலிருப்பதும் ஒன்றாம். வியாபாரிகளுடைய கணக்கும் எழுத்துருக்கும் தமிழானபடியால், தமிழறியாத மலையாளிச் சகோதரர்கள் வியாபாரவிஷயத்தில் பின்னிட்டு நிற்கிறார்கள். என் அபேட்சைப்படி ஒரு தமிழ்ப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தப்படுமானால், வியாபாரத்தில் பிரியமுள்ள மலையாளிச் சிறுவர்கள், தமிழ்ப்படிக்கவும், அதன் மூலம் மலையாளிகளுக்கிடையில் வியாபாரமுயற்சி விருத்தியடையவும் மார்க்கமுண்டாகும்.

ஆகையால் சாலைவூரசிகள் யாவருக்கும் பொதுவாய் உபகாரப்படக்கூடிய இந்தத் தமிழ்ப் பள்ளிக்கூடவிஷயத்தைக் கவர்ன்மெண்டார் கருணையோடு கவனிப்பாரென்று பூர்ணமாய் நம்புகிறேன்.”

நாஞ்சிநாட்டு மருமக்கள்வழி மான்மியம்.

(13-வது பக்கத்தொடர்ச்சி.)

கடலாடுபடலம்.

நேர்ந்த வெல்லாம் நெடுநா ளாகியும்
நெஞ்சைவிட் டின்னும் நீங்க வில்லையே!
இவை
இறந்து போகுநா ளன்றி யிடையில்
மறந்து போய்விட மருந்து மில்லையோ!
சென்ற
ஆடி மாதம் அமாவாசை யன்று
குடும்பத் தோடு குமரித் துறையில்
தீர்த்த மாடச் சென்று நாங்கள்
பட்ட பாடும் பரிசு கேடும்
சொல்லி முடியுமோ! சொல்லி முடியுமோ!
கரையில் தர்ப்பணக் கடனெலாம் முடித்து
நீரில் இறங்காது நின்றனர் கணவர்.
நின்றனர் நின்றனர் நெடிது நின்றனர்,
கண்டவர் இதற்கென் காரணம் என்றனர்.
அவரும்
“ஏக காலத் திவர்களை எல்லாம்
அங்கை பிடித்துநீர் ஆடுதற்குநான்
பன்னிரு கரத்தப் பரம னல்லவே,
இருபது கரத்தவ் விராவண னல்லவே,
ஆயிரம் கரத்தவ் வண்ணலு மல்லவே”
என்று பலபல சொல்லி யிறுதியில்
மணந்த முறையாய் மனைவிய ரெங்களைத்
தனித்தனி யாகத் தடங்கை பற்றிக்
கடனீ ராடினர்; கதையிது பெரிதே!
இங்ஙனம்
ஐந்து முறைநீ ராடி வந்ததனால்
ஐயோ அவரும் அறுபது நாள்விடாச்
சுரத்தில் விழுந்து துன்பம் அடைந்தனர்.
அடையவே
ஏட்டைத் திருப்பித் திருப்பி யிருந்தும்
பாட்டைப் பாடிப் பாடி யிருந்தும்
நாட்டு வைத்தியர் நாளைக் கடத்தினர்.
முடிவில்
*மிஷியன் தொரசா—மிகத்தய வுள்ளவர்,
பொறுமை நல்லதைப் புண்ணிய முள்ளவர்
இறைவன் அடிகள் இதயத் துள்ளவர்—
வந்தொரு வாரம் மருந்து கொடுத்துக்
கணவரை மீட்டியெம் கைகளி லாக்கினர்.
இவர்
காட்டை வெட்டிக் கஷாய மிடவோ
கடலைக் குறுக்கிக் குடிநீர் காய்ச்சவோ
மலையை யிடித்துச் சூரணம் வைக்கவோ
சொல்லி எங்களைத் தொந்தரை செயவிலை;
அன்றியும்
பணமோ காசோ பாதிவெற்றிலையோ
எமக்குச செலவுகள் ஏற்பட் டதுமில்லை;
இவ்வறம்
வையகத் தென்றும் வளர்க வளர்கவே!
வையகத் தென்றும் வளர்க வளர்கவே!

பரிகலப் படலம்.

ஐவரை மணந்தெம் கணவர் அடைந்த
துயரெலா மிங்கு சொல்லி முடியுமோ!
இவரில் ஒருத்தியாய் எளியேன் அடைந்த
குறையெலா மிங்கு கூறி முடியுமோ!

ஒருநாள்—
வெட்கம் வெட்கம் மிகவும் வெட்கம்!
துக்கம் துக்கம் பெரிதும் துக்கம்!

---

* Medical Evangelist of the London Mission Society.

மனமும் நாணி வருந்துதே யம்மா
நாவும் குளறி நடுங்குதே யம்மா
எப்படிச் சொல்வேன் ! யாவற்றிற்கும்
என்தலை விதியை யன்றியில் வுலகில்
யாரை நோக இடமுண் டம்மா !—
தீபா வளியோ திருக்கார்த் திகையோ
நன்றாய் எனக்கு ஞாபக மில்லை
வீட்டில் ஏதோ விசேஷ முண்டு
விரவ நல்லூர் விருந்து முண்டு
பருப்பு முதலிய பற்பல கறிகள்
வகைவகை யாக வைத்தது முண்டு
வந்த மனிதரும் எங்கள் மன்னரும்
அமுது செய்துகை யலம்ப வெளியில்
இறங்கினர், உடனே எனக்கு முன்னாய்
வாழ்க்கைப் பட்ட மனைவிய ருக்குள்
இழுப்பும் வலிப்பும் எதிர்ப்பும் வந்தன,
அடியும் பிடியும் கடியுமாயின,
மனிதப் பிறவியில் வந்தவ ராமென்
றெள்ளள வேனுமோர் எண்ணமிலாதவர்
கொண்டை பற்றிச் சண்டை செய்தனர்,
மண்டை ரத்தம் வடிய விட்டனர்.
என்றால்
ஆனை மட்டும் விலக்கினே னம்மா
ஆகா தாகா தென்றே னம்மா
கெஞ்சிக் கெஞ்சிச் சொன்னே னம்மா
கீழே விழுந்து கும்பிட்டே னம்மா
எதற்கும் அவர்கள் இணங்கி னாரில்லை
எளியேன் செய்யவே தென்னுண் டம்மா ?
கூகூ என்ற கூக்குரல் கேட்டு
பக்கத் துள்ளார் பலரும் வந்தனர்,
ஊரார் எல்லாம் ஒன்றாய்க் கூடினர்,
விருந்தின ரெல்லாம் விரலை மூக்கில்
வைத்த படியே மயங்கி நின்றனர்.
முடிவில்
மேலவீட் டண்ணன் வெள்ளையம் பிள்ளை
(நல்ல மனிதன் நடுநிலை யுள்ளவர்
நாலு காரியமும் நன்றா யறிந்தவர்
படடுத் தேறிப் பழக்கம் வந்தவர்
என்ன செய்யலாம் இறந்துபோனாரே)
வந்தொரு வாறு வழக்கைத் தீர்த்தார்.
"ஒவ்வொரு நாளைக் கொவ்வொரு மனைவி
புருஷன் எச்சில் புசித்திட வேண்டும்
இடையில்
தீபா வளியோ திருக்கார்த் திகையோ
வேறும் மாதிரி விசேஷ நாளோ
வந்திடு மாகில் வரிசை வரிசையாய்
ஐந்திலை யிட்டவை யனைத்திலு மமுது
படைத்துப் புருஷன் பருகிய பின்னர்
பரிகலத் துள்ள பதார்த்த மெல்லாம்
மனைவியர் சரியாய் வகுத்துண வேண்டும்
வழக்குகள் ஒன்றும் வரலா காதெனக்"
கூறிப்போயினர் ; கூடி யிருந்தோர்
யாவரும் இதுவே நீதி யென்றனர்.
என்றவர்
கலகமுண் டான காரண மறிந்து
சிரித்து நின்றார், சீ சீ யென்றார்,
எச்சில் இலைக்காய் இந்தக் களரி
கூட்டுவ ரோவெனக் கூறிப்போனார்.
ஐயோ !
துயரம் துயரம் பிறப்பே துயரம்
பிறப்பினும் துயரம் பெண்மக ளாதல்
பெண்மக ளாதலிற் பெரிதும் துயரம்
மருமக் கள்வழி வலையிற் படுதல்,
வலையிற் பட்டு வருந்தலில் துயரம், ஓர்
காரண வருக்குக் கழுத்தைக் கொடுத்தல்,
கழுத்தைக் கொடுத்தலில் துயரம கருணை
இல்லா மாமிக் கிசைய நடத்தல்
இசைய நடத்தலில் துயரம் என்போல்
பாரக மீதிப் பஞ்சபா விகளில்
ஒருத்தி யாக உயிர்பெற்றிருத்தலே.

நாகாஸ்திரப் படலம்.

இம்முறை யாக இருக்கும் காலம், எம்
கணவரை யொருநாள் மருமகன் கண்டு
வழக்குப் பேச வந்தா னம்மா.
வந்தவன்
அம்மா னென்றோ ரடக்கமில் லாமல்
மாமன் என்றோர் வணக்கமில் லாமல்
கூறின மொழியெலாம் கூறுவே னம்மா:—
"ஆகதாள் செத்த அடியந்திரச் செல
வாயிரம் பணத்துக் கதிகம் வருமோ ?
விளையுநிலமாய் வெட்டித் திருத்த
பனைகளை விற்ற பணம் போதாதோ ?
கன்னி யம்மை கலியா ணத்தில்

கார்த்தா சுமக்குங் கைப்பொறுப் புண்டா?
மருமக னென்றொரு மஞ்சா டிப்பொன்
குச்சாகிலும் நீர் கொடுத்தது முண்டோ?
ஆண்டு தோறு மாதா யத்தில்
ஆயிரம் ரூபாய்க் கையம் இல்லையே!
ஏழாண் டாக இந்த மிச்சம
எங்கே போச்சுது? என்னடா அப்பா!
கேட்பாரில்லையோ! கேள்வியு மில்லையோ!
கெட்டா மாவும் கெடுக்கன் வயலும்
யாரிடம் கேட்டுநீர் ஈடுகொடுத்தீர்?
கடனுக் கென்ன காரணம சொல்லும்?
ஊரில் காரிய விசாரம் உமக்கு
வேண்டாமென்றேன், விடுவேனோ என்றீர்;
கணக்கன உமது கழுத்து முறிய
எல்லாச சுமைகளு மேற்றிவைத்த தினால்
அம்மன வகைக்கீ ராயிரம் ரூபாய்
தெண்டமிறுத்த கதை தெரியாதோ?
உச்சிக் கொடைக்குப் பிச்சி வெள்ளையும்
கொழுந்தும் தாழம் பூவும் கொண்டு
வரவில்லை யென்றுநீர் வைரவன் மகனை
எட்டி படித்த ஏதுவி னாலே
எத்தனை ரூபாய் வாரி யெறிந்தீர்!
இதுநாள் வரையிலும் எங்கட்காக
எதைநீர் செய்தீர்? எதைநீர் தந்தீர்?
மக்கட்கெல்லாம் வாரிக் கொடுத்தீர்!
ஒருபூவாகிலும் உழக்கு நெல்லு
பொலியள வீந்து கொண்டு போவெனத்
தந்தது முண்டோ? சரி, சரி, இன்னும்
உள்ள நிலங்களை ஒவ்வொன்றாக
ஒற்றி கொடுத்திடும்; மன்றனை ஓலைகள்
எத்தனை வேண்டுமோ எழுதியும் வைத்திடும்;
போர்க் கூலிப் பிரமாணம செய்யும்;
இஷ்டதானம் எழுதிக் கொடுத்திடும்,
வேண்டுமானால் விலையும் கொடுத்திடும்;
மனைவி பேர்க்கும் மக்கள் பேர்க்கும்
உகந்துடைமைப் பிரமாணம் ஒன்று நீர்
இருக்கும போதே எழுதியும் வைத்திடும்;
மக்களை வீட்டில் வாழ வைத்திடும்;
எங்களைத் தெருவில் இறக்கி விட்டிடும.
ஆசை அங்கே அன்பும் அங்கே;
பூசை இங்கே போஜனம இங்கே;
ஆண்டாக் கேட்டு நீர் ஐந்து கலியாணம்

அடுக்கடுக்காகச் செய்தீரையா?
பட்டப் பெயரும் "பஞ்சகல்யாணிப்
பிள்ளை" யென்றுநீர் பெற்றுவிட்டீரே!
அன்னியர் பொருளை அபகரிப் பதிலும்
ஊரார் பொருளை உண்டு வாழ்வதிலும்
கைதேர்ந்தவர்கள் காரண வர்களே!
கள்ளர் மறவர் கணக்கரு மிவருக்
கெள்ளள வேனும் இணையா வாரோ!
கன்னக் கோலும் கையில் எடாமல்
எழுது கோலும் இறகும் எடாமல்
இரவும் பகலும் இஷ்டம் போல
திருடும் திறமைச் சீமையி லெவருக்
குண்டு? இதனை உணர்பவருண்டோ?
கள்ளன் கஜனுக் காவலன் ஆனால்
கொள்ளை யடிப்பில் குறை வைப்பானோ?
செல்வமெல்லாம் சிதையக் காரணம்
சிறுவர் சோம்பித் திரியக் காரணம்
மங்கையர் கண்ணீர் வடிக்கக் காரணம்
வழக்குகள் மென்மேல் வளரக் காரணம்
குடும்ப நிலைமை குலையக் காரணம்
நாஞ்சி நாட்டுக்கோர் நாச காரணம்
எல்லாம் நீங்கள் என்றறிந் தல்லவோ
காரணவா எனும் காரணப் பெயரைத்
தந்தனர் உமக்கும் அந்தக் காலமே.
காரணத் தீனம் கடிய தீனம,
கண்டரத்தில் மருந்து கருத்தாய்க்
கொடுத்தா லன்றிக் குணமாகாது,*
போகர் மச்ச முனிபுலிப் பாணியர்
கருணா நந்தர் கருவூரா தேவர்,
அகஸ்தியர் முதலிய ரிஷிகள் அனைவரும்
வைத்தியம் மந்திர வாத மிவற்றை
பாட்டுக் கணக்காய்ப் பாடி வைத்தனர்!
ஏட்டுக் கணக்காய் எழுதி வைத்தனர்!
இவரும காரணத் தீனம இன்னதென் -
றறிந்தொரு குளிகை லேகியம் அல்லது
சூரணம் அதற்குச் சொன்னது முண்டோ?
அஷ்டாங்கிருத வைத்தியர்:—" ஐயா
எல்லாப் பிணியிலும் பொல்லாப் பிணியிது,
எங்கள் நாட்டில் இப்பிணியாலே
வருந்தா திருக்கும மனிதர் சிலரே;
இதுநாள் வரையும் இப்பிணி தீரக்
கஷாய மொன்று கண்டு பிடித்தவரில்லை.
வயக்கரை மூஸ்ஸ வைத்திய ரத்னமும்

எம்மா லியலாதென் றுங்கை விட்டிடில்
பிணியின் கொடுமை பேசவும் வேண்டுமோ ?—"
என்று கூறியிருந்தனர், என்செய்வார் ?
இங்கிலீஷ் டாக்டரும் இதற்கு மருந்துகள்
இருப்பதாக இயம்பிடக் காணேம்,
இப்பிணி போல வெப்பை எழுப்பும்
பிணியிவ் வுலகில் பிறிதொன் றில்லை.
ஈயினம் தேடி யீட்டிய தேன்போல்
பலரும் பலநாள் பாடுபட்டுக்
கூட்டி வைத்த குடும்ப முதலைத்
தீனம் கொண்டவர் தீண்டுவரோ டுடன்
ஆனை தின்ற விளாம்பழ மாமதற்
கையமில்லை; அறியார் யாரே !
பாரும்! பாரும்! பத்திர மாயிரும்!
குடும்ப தோஷி யென்றுமைக் கொண்டு
கோர்ட்டில் கேஸு கொடுப்பேன் பாரும் !
உண்மையாக உம்மையும் அதனில்
ஸாக்ஷி போட்டு ஸமன்ஸை யனுப்பி
வரவில்லையானல் வாரண்டும் அனுப்பி
(காலரைசெலவாம் காரியமில்லை)
கூட்டில் ஏற்றிக் குறுக்கு மறுக்காய்
'கிராஸ்' கேட்டுக் கேவல மாக்கி
விடவில்லை யானல் வீரபத்திரன்
மகனென்றென்னை மதிக்கவே வேண்டாம்."

(தொடரும்.)

Madras war Fund Stamp.

We publish the following leaflet from the Honorary Secretary, Madras War Fund Stamp, with as much pleasure as that of Mr. C. S. V. Iyer who wrote to one of the Editors of this Journal thus, when he learnt of our successes in the campaign which he was serving.

" Dear brother-in-law,

I wish I were at Basra once more to see Bagdad. "

The leaflet itself, we are glad to say, was sent to us from the Travancore Secretariat under G. No. 2209.

—:0:—

His Excellency Lord Pentland, as President of the Madras War Fund, has asked us to announce that the Madras War Fund Stamp will shortly be issued and be for sale.

The stamp was designed by Mr. W. S. Hadaway, Superintendant, School of Arts, Madras, and shows the " Madras " Steaming along, with " Madras War Fund " inscribed along the top centre , with a life buoy of the ship in each upper corner, and a Red Cross in each lower corner and " *Half ½ Anna* " along the centre bottom line on a scroll.

The dies for the stamp have been struck by the Hyderabad State Mint, where it is being printed free of cost by the generosity of His Highness the Nizam.

In the name of the subscribers, His excellency hopes that all the leading firms and establishments in Madras will undertake to sell these stamps as is done in Bombay. The success attained there should stimulate every one in this Presidency to endeavour to surpass the efforts of Bombay, where over a lakh has already been obtained for the Bombay Presidency War Relief Fund by the sale of their stamps The whole cost of production in Bombay was met by business firms and a most generous reception was accorded to the stamp itself. One firm alone took Rs. 950/—of the stamp and another undertook to affix them to every shipping order issued by them, while many firms enclosed notices of the stamp in their correspondence. All shops, clubs, hostels, etc., sell them and have distributed posters and handbills. Cinema proprietors sell them in each performance and all the papers do their best to promote the sale. So every one can help by fixing a stamp as seal to their ordinary correspondence.

Stamps will be sold bound up in books containing 32 stamps and will be procurable in this form from the Honorary Secretary, Madras War Fund Stamp, Government House, Madras

Stamps will also be procurable from the local Secretaries of the Ladies' Depot of the Madras War Fund, and His Excellency takes this opportunity of asking the secretaries to kindly undertake this work in addition to the help they are already giving to the Fund.

The arrival of the stamp will be notified in due course and application for books of stamps will then be gratefully received.

It must be clearly understood that the stamp cannot be used as a postage stamp but merely as a seal to the letter to which it is affixed, to show that the writer is subscribing to the War Fund by buying and using the stamp; also by this means, be advertising the stamp and the War Fund all over the Presidency.

L. M. PEET, Captain,
Honorary Secretary,
Madras War Fund Stamp.

Government House, Madras,
19th February 1917.

மனக்குரங்கு*

(ஒரு சிறு கதை.)

ஸ்ரீமாந் S. முத்துசுவாமிப் பிள்ளையவர்கள்.

இரவு நாழிகை 15 ஆயிற்று. வைத்தியகேசரி நாராயண பண்டிதர் தன் வைத்தியசாலையில் எரிந்து கொண்டிருந்த விளக்கை அணைத்துவிட்டு வெளித் திண்ணையிற் கிடந்த சாய்பு நாற்காலியில் வந்து படுத்தார். பங்குனி மாதச் சுக்கிலபட்சத் தசமி சந்திரன் தனது தண்ணிய கிரணங்களை உலகமுழுதும் பரப்பியுள்ளானாயினும் அவை வைத்தியகேசரியின் முகக்கமலத்துக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தில. அந்நேரத்திய சாய்பு நாற்காலிப் படுக்கை சமாதான மன நிலைமையுடையார்க்கு சுகமான நித்திரை அளிக்கும் தகைமையுடையதாயினும் வைத்தியகேசரியின் கண்ணிமைகள் ஒரு சிறிதும் பொருந்தவில்லை. இடக்கையால் தன் விரிந்துயர்ந்த நெற்றியைப் பிடித்துக்கொண்டு மேல் நோக்கிய வண்ணமாய்க் கிடந்தார். அவருள்ளத்தை அநேக சிந்தனைகள் கவர்ந்து வாட்டுவதாக முகக்குறிகள் காட்டின. இவ்வாறாகச் சில நிமிஷங்கள் செல்ல வீட்டினுள்ளறையிலிருந்து ஒரு இரக்கக்குரல் உண்டாயிற்று. உடனே நமது வைத்தியர் வைத்தியசாலைக்குட் புகுந்து நெருப்புப் பெட்டியை எடுத்துரைத்து விளக்கேற்றி உள்ளறைக்குட் சென்றார். அங்கு ஒரு கட்டிலின்மேல் படுத்திருக்கும் அவரது மனைவி சுகமாக நித்திரை செய்கின்றாள். உற்றுப் பார்த்தார். உற்றுக் கேட்டார். திட்டமாகவே அவள் சுக நித்திரையிலிருக்கின்றாள். பின் குரலுண்டானதற்குக் காரணம் என்ன? ஒருவேளை ஏதேனும் கனவு கண்டு கூப்பிட்டிருக்கலாமோ? எவ்வாறாயினும் ஆருயிர்த் துணைவி கவலையற்றுத் தூங்குவது அவருக்கு அடங்காக் களிப்பைக் கொடுத்தது. பின்னும் விளக்கையணைத்துவிட்டு சாய்பு நாற்காலியில் வந்து உட்கார்ந்தார். இரவு முழுதும் விளக்கெரித்து வீண்செலவு செய்யத் தக்க பொருட்பெருக்கு வைத்தியருக்கு இருந்ததில்லை. அதுபற்றியே அவர் இரண்டு முறை விளக்கை யணைத்தது.

வறுமையின் கொடுமையால் இயன்ற மட்டும் கெட்டு மெட்டாய்க் காலந்தள்ளி வந்தார். அவரது சிகிற்சையில் ஏராளமான பிணியாளிகளுண்டு. ஆனால் தனவந்தர் மட்டும் அத்தொகையில் பூச்சியம். வைத்தியர், பரோபகாரச் சிந்தனையும் ஜீவகாருண்யமும் மிக்குடையவர். பிணியாளி தோட்டியானாலும் தொண்டமானானாலும் அவர் ஒரு வேற்றுமையும் பாராட்டுவதில்லை. ஜீவர்கள் பிணியை நீக்குவதே தன் ஜீவித நோக்கமாகக் கருதியிருந்தார். கனிவுள்ள இடத்தில் ஈக்கள் மொய்ப்பது போற் கருணையுடைய அவரிடத்தில் திக்கற்ற ஏழை நோயாளிகள் சரணமடைவாராயினர். அங்ஙனம் வந்தவர்களின் பிணிபாற்றும் வேலையே அவருக்குப் பூரணமாக இருந்தமையால், சீமான்களான பிணியாளிகளைச் சிகிற்சிக்கவும் அவர்களது மாளிகைகளில் காத்திருக்கவும் அவருக்கு வசதியும் விருப்பமும் உண்டாயதில்லை. "வறியோர்க் கழுத வறுமையிற் செம்மை" என்பதற்கிணங்க எத்துணைத்

* Rights Reserved.

துன்பங்கள் சூழ்ந்தகாலத்தும் அவர் அறநெறி பிறழவில்லை. அவருடைய முதல் மனைவி சில வருஷங்களுக்குமுன் இறந்துபோக, இரண்டாவதாக ஒரு கன்னிகையை மணந்தார். அவள் பால்போன்ற குணத்தள்; பளிங்குபோன்ற மனத்தள்; கற்புக்கருங்கலம்; கணவனுக்கு எவ்வகையாலும் பொருத்தமான காதலி. தம்பதிகள் வயதில் மட்டும் 30 வருஷம் வேற்றுமையுடையவர்களாயிருந்தனரே யன்றி வேறெவ்விஷயத்திலும் மிகவும் ஒற்றுமையுடையவராகவே வாழ்ந்தனர். அங்ஙனமிருக்குங்கால் நல்ல மரத்தில் நரைவிழுவது போல் அவர்கள் 'இல்வாழ்க்கைக்கு ஒரு இடையூறு உண்டாயிற்று.

வைத்தியர் மனைவி சுசீலை பித்தநோயின் படுவாயில் விழுந்தாள். வைத்தியர் ஒரு வருஷமட்டும் சிகிற்சைசெய்து ஒருவாறு பிணியைப் போக்கினராயினும் உடம்பு தேறவில்லை. சுசீலை எழுந்திருந்து நடமாட இயலாதவளாயிருக்கின்றாள். அன்னபானாதிகள் தேவையுமில்லை. குடிநெருக்கமுள்ள திருவனந்தபுரத்தின் சீதோஷ்ண நிலைமையும் காற்றும் சுசீலையின் சுகத்துக்குப் பிரதிகூலமானவை யென்று வைத்தியருக்குத் தெரியும். குற்றாலத்தில் சுமார் ஆறுமாதம் தங்கி சஞ்சீவி லேகியமுண்டு சர்வரோக சங்காரித்தைலம் வைத்து ஸ்நானம் செய்தால் தன் இன்னுயிர்த் தலைவியின் மேனி பொன்னினும் பொலிவுற்று விளங்குமென்று அவர் உறுதிசெய்துமுள்ளார். ஆனால் பொருள் வேண்டுமே! பாழடைந்த உலகத்தைப் பணமன்றோ அடக்கி யாள்கின்றது. இருக்க, நடக்க, தும்ம, இரும, எதற்கும் பணம் வேண்டுமாம். அந்தப் பணம் தான் வைத்தியரிடத்தில் குதிரைக்கொம்பு. நான்கு ரூபாயை வைத்தியர் ஒன்றாகப்பார்த்து நாட்கள் பலவாயின. குற்றாலயாத்திரைக்கோ குறைந்த பட்சம் கூட 100-ஆவது வேண்டும். அவருடைய நிலைமைக்கு நூறுரூபா முடவன் கொம்புத் தேனை விரும்புவது போல இருந்தது. விளக்கெண்ணெய் மீதம்பிடித்துப் பொருள் கூட்டும் நிலைமையிலிருக்கும் அவருக்கு அத்தொகை மலையினும் பெரிதாய்த் தோன்றிற்று.

புத்திசாலியான வைத்தியர் செட்டுமெட்டாய்க் காலந்தள்ளிவந்தார். அவருடைய வீடு மூன்று அறைகள் மட்டும் உடையது. முதல் அறையை வைத்தியசாலையாகவும், இரண்டாவதைப் படுக்கையறையாகவும், மூன்றாவதைச் சமையலறையாகவும் உபயோகித்துவந்தார். மனைவி நோய்வாய்ப்பட்ட நாள்முதல் தன் ஏவலாளனாகிய சிறுவனை சமையற்காரனாகவும், ஏற்படுத்திக்கொண்டார். இதுவே வைத்தியரின் சுருக்கமான சரித்திரம்.

வைத்தியர் மேலே கூறியபடி சிந்தாக்கிராந்தனாய் இராப்போஜனம் முடிந்த பின்னர் நோயாளிகளுக்கு மருந்துகொண்டுசென்ற சிறுவன்வரவை எதிர்பார்த்த வண்ணமாயிருந்தார். மணியும் 12-க்கு மேலாய்விட்டது. நகரவீதிகளெல்லாம் ஆளரவமற்று மௌனமாயிருந்தன.

இத்தருணத்தில் வெளிக்கதவு திறக்கப்பட்டு ஒருவன் உள்ளேறிவந்து வைத்தியருக்கு வந்தனம் புரிந்து நின்றான். வைத்தியருக்கு வந்தவர் இன்னாரெனப்புலப்படாமையால் "அது யார்?" என்றார்.

வந்தவன். "நான்தான் பழனியப்ப முதலியார்."

நாரா: "என்ன! குப்புப்பாட்டி வீதியிலிருக்கும் நோயாளி தாங்களா?"

பழனி: "பிணியாளி நானல்ல; என் தம்பி."

நாரா: "சரி, வந்தகாரியம் என்ன?"

பழனி: "உம்முடைய நன்மைக்காகத்தான்."

நாரா: "ஐயா, வந்தகாரியத்தை விரைவாய்ச் சொல்லும். நேரம் அகாலமாய்விட்டது. தூங்கவேண்டும்."

பழனி: "தங்கள் நிலைமையைப்பற்றிப் பலர் சொல்லக்கேட்டிருக்கிறேன். இந்தப் பாழுலகத்தில் நல்லவர்கள் எல்லாம் துன்பந்தான் அனுபவிக்கிறார்கள்."

நாரா: "ஐயா! பிரசங்கத்தைச் சுருக்குங்கள். வந்த காரியத்தை இரண்டொரு வார்த்தையில் சொல்லி முடியுங்கள்."

பழனி: "உலகியல் விசித்திரமாயிருக்கிறது. வஞ்சனையுடையோர் பெரும்பாலும் வாழ்வடைகின்றார்கள். தூயநெஞ்சத்தார் துயர்வாய்ப் படுகின்றார்கள். உண்மையுடையோர் பாடு அம்பலந்தான். 'உண்மை உத்தம 'தந்திர'மாம்' இக்காலக் கொள்கை இதனால் ஏழைகள் பிழைப்பதெப்படி. வாயுடையவன் வெற்றி அடைகிறான். நம்பிக்

கைத்துரோகம் செய்வோர் நகைமுகத்தோடிருக்கின்றார். பிறரை நம்பினோன் பிழையுங் கண்ணுமாயலைகின்றான்."

நாரா: "செவிடன் காதில் சங்கூதின கதையாயிருக்கின்றது. நான் சொல்வதைச் சிறிதும் கவனியாமல் வேதாந்தம் படிக்கிறீரே. நல்லது! படித்துக்கொண்டே யில்லும்" என்று சினந்து விளக்கக்கொளுத்தினர்.

முதலியாரும் உள்ளே சென்று நாற்புறமும் சுற்றி நோக்கி—"வறுமையின் கொடுமை பயங்கரமானதே. தரித்திரனாய் வாழ்வதிலும் சாவதே நலம். வறியனுக்கு எப்பொழுதேனும் மனச்சுகமுண்டா? உலகம் அவன் மட்டிலுஞ் சுடுகாடே. உலக இன்பங்களும் நரகத்துன்பங்களே. இது பற்றியன்றோ "கொடிது கொடிது வறுமை கொடிது" என்றார் ஒளவைப்பிராட்டியும்."

முதலியார் பிரசங்கத்தைக் கேட்ட வைத்தியர் அவர் முகத்தை உற்று நோக்கிக்கொண்டு நின்றாரேயன்றி மறுமொழி ஒன்றும் கூறவில்லை.

பழனி: "ஐயா! வைத்தியரே, ஏன் இப்படி என்னை விழித்துப் பார்க்கிறீர்? ஓகோ! ஒருக்கால் என்னைப் பைத்தியக்காரனென்று எண்ணுகிறீரா? உண்மையாக உம்முடைய குப்புப்பாட்டி வீட்டுப் பிணியாளிதான் பித்தன். நான் அவன் அண்ணன். எங்கள் பெற்றோர் வெகுநாளாய்ப் பிள்ளை இல்லாமல் பழனிமலையப்பனை வழிபட்டு, புத்திரப் பேறடைந்தால் முப்பேரிடுவதாய்ப் பிரார்த்தனை செய்து, பிறந்த இரண்டு குழந்தைகளுக்கும் பழனியப்பனெனப் பெயரிட்டார்கள். அக்குழந்தைகள் இருவரும் நாங்களே. பெற்றோர் இறந்தபின்னர் இருவரும் வியாபாரத்துக்காக ரங்கூன் சென்றோம். நான் பலமுறை வியாபாரத்தில் தோல்வியடைந்து தரித்திரனானேன். என் தம்பி 5 வருஷத்தில் 15 கோடி ரூபாய் சம்பாதித்துச் சீமானானான். ஆனால் செல்வத்தைக் கொடுத்த தெய்வம் அவனுக்குச் சித்தசுகத்தைக் கொடுக்கவில்லை. கொஞ்சநாளாக அவன் சித்தப்பிரமை கொண்டலைகின்றான். கைப்பொருளைக் கண்டபடியெல்லாம் செலவுசெய்கின்றான். இவ்விடத்தில் வந்தபின்னர் பிணிவாய்ப்பட்டு வருந்துவதாயறிந்து நான் நேற்று இங்கு வந்து அவனைப் பார்த்தேன். பிணியின் நிலைமை அபாயகரமாயிருக்கின்றது. சுயார்ச்சிதப்பொருளை அவனிஷ்டப்படி செலவுசெய்ய அவனுக்கு உரிமையுண்டு. ஏன் கதையை நீட்டுகின்றேன்? அவன் கையிலிருக்கும் மீதப் பொருளையெல்லாம் சென்னை ராஜதானியிலுள்ள பல தருமஸ்தாபனங்களுக்கு நன் கொடையளித்திருப்பதாய் நாளைப் பத்து மணிக்கு "உவில்" (will) எழுதப்போகின்றான். நான் கால் தம்படியில்லாத ஆண்டியாயிருக்கிறேன்."

நாரா: "நீங்கள் சொல்வது உண்மைதானோ?

பழனி: "அதற்கும் சந்தேகமா? வேண்டுமானால் நாளைக்குப் பாருங்கள்.

நாரா: "ஆனால் நீங்களும் சிறிது பொருளுதவி வேண்டக்கூடாதா?"

பழனி: "நாங்களிருவரும் ஜென்மப் பகைவர்கள். அதிலும் அவன் மனோ நிலைமை விசித்திரமானது. அவனுக்குத் தோன்றியதை அவன் செய்வான். யார் சொன்னாலும் கேட்கவும் மாட்டான்."

நாரா: "நல்லது, தாங்கள் என்னிடம் வந்த காரியம் என்ன?"

பழனி: "தங்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் தர வந்திருக்கிறேன்."

நாரா: "என்ன, அவர் கொடுத்தனுப்பினாரா?"

பழனி: "பேஷ்! பேஷ்! அவனாவதேது, கொடுப்பதாவதேது? நானுகத் தரப்போகிறேன்."

நாரா: ஏதையா, கால் தம்படிகூட இல்லையென்றீரே.'

பழனி: "ஆம். உண்மைதான், நாளைப் பத்துமணிக்கு அவன் "உவில்" எழுதாமற்போனால் அவனிடம் மீதமிருக்கும் 10 லட்சத்துக்கும் உடையவனாவேன். அதில் உமக்கு ஒரு லட்சம்."

நாரா: "என்னய்யா, தங்கள் பேச்சு ஒன்றும் விளங்கவில்லையே."

பழனி: "நல்லது விளங்கும்படி சொல்லுகிறேன். அவன் இன்னும் எத்தனை நாளைக்கு உயிரோடிருப்பான்?"

நாரா: "ரோகம் முற்றிவிட்டது. இரண்டுவாரத்துக்கு மேலிருப்பது அசாத்தியம்."

பழனி: "இவ்வளவுதானே. இரண்டு வாரத்துக்கு மூன் போய்விட்டால் யாருக்கு என்ன நஷ்டம். கேட்போருக்கும் ஒருவித சந்தேகமும் உண்டாகாது. கொடுக்கும் மருந்திற் சிறிது விஷம் சேர்த்தால் யார் அறியப்போகிறார்கள். நாளை ஒன்பதுமணிக்கு வக்கீல் வரப்போகிறார். எட்டு மணிக்கு முன் தம்பி கண்மூடினால் 10 லட்சமும் எனதுடைமை அதில் ஒருலட்சம் தங்களுக்கு, மறுவாக்கில்லை இதோபாருங்கள்" என்றுசொல்லிக் காகிதத்தை நீட்டினார்."

நாரா: "பாதகா! கொலைசெய்யத் தூண்டுகிறாயா? பணத்துக்காகப் பிராணஹானி பண்ணவா? ஐயோ! பாவி! என் கண்முன் நில்லாதே! போய்விடு போய்விடு!" என்று வெளிக்கதவைக் காட்ட, பழனி: "சரி. இதோ போய்விட்டேன்! என் கைச்சீட்டை வைத்துக் கொள்ளுங்கள். புத்தியுண்டானால் பிழையுங்கள். தலையால் வந்த பாக்கியத்தைக் காலால் தள்ளாதேயுங்கள்!" என்று கூறிக் கைச்சீட்டையும் அவர் முன்னெறிந்து முதலியார் போய்விட்டார்.

வைத்தியர் கைச்சீட்டை எடுத்துப் பார்க்க, பின் வருமாறு எழுதியிருந்தது. "எனக்குக் கிடைக்கிற பத்து லட்சம் ரூபாயில் ஒரு லட்சம் ரூபாய் என் தம்பிக்குச் சிகிற்சை செய்த வைத்தியகேசரி நாராயண பண்டிதருக்குக் கொடுக்க என் தம்பி விரும்பியபடி நான் கொடுத்துக் கொள்கிறேன்."

பழனியப்ப முதலி (கையெழுத்து).

சீட்டைவாசித்துமுடிக்குமுன் வைத்தியர் உடம்பு நடுங்கத்தொடங்கிற்று. அச்சீட்டின் ஒவ்வொரு எழுத்தும் பண்டிதரது மனோநிலைமை மாசுற விதைத்த நச்சுவித்துப் போலாயிற்று. செய்வதிதுவென அறியாது திகைத்து நின்றார். "ஒரு லட்சம் ரூபாய்! என்ன ஆச்சரியம்! ரோகம் பெரிதேயாயினும் அதனைச் சூழ்ந்து கவிந்திருக்கும் பாதகம் அளவிடற்கரிதாயிருக்கின்றது. சிசீ! இரண்டுவாரினும் இப்பழிபுரியேன.

"நன்றே தரினு நடுவிகந்தாம் ஆக்கத்தை யன்றே யொழியவிடல்"

என்ற தேவர்மொழியை மறவேன்" எனபன வாதிய சிந்தனைகள் வைத்தியர் உள்ளத்தில் உலாவி நிற்குப்பொழுது, ஐயோ! ஐயோ! என்னுமோர் இரக்கக்குரல் வீட்டிலுள்ளறையிலுண்டாக, பண்டிதர் பரிந்தோடி தன் மனைவி கிடந்த கட்டிலையடுத்தார். சிவ! சிவ! அப்பொழுது அவர் கண்டகாட்சி கல்லையும் கனிவுறச் செய்யவல்லதாயிருந்தது. சுசீலையின் தோற்றம், மனதைத் துன்புறச்செய்தது. அந்த நிமிஷநேரம் சுசீலை கணவன் முகத்தைக் கனிந்து நோக்கிய பின்னர் "என்னுயிர் போகின்றது! என்னுயிர் போகின்றது!" எனக் கூறிக் கண் மூடினள். பண்டிதர் பாட்டை விரித்துரைக்க வேண்டுமோ?

தன்னுயிரே ஆன மனைவி உயிர் நீத்த பின்னர் அவருக்கோருயிர் உளதோ? சித்திரப் பதுமைபோல் நின்றார். தெய்வத் திருவருளை மனமொழி மெய்களால வேண்டினார். சிறிது மனந்தேறி மனைவியின் இடக்கரத்தைப் பற்றி நாடிபார்த்தார். தீமையொன்றும் உண்டாகவில்லை. பிணியின் கொடுமையால் பிணியாளியின் மனமும் மிகப் பயங்கரமான மாறுதலடைந்திருக்கின்றது. குற்றால யாத்திரையை இன்னு மாற்றி வைத்தால் குடிகேடு உண்டாதல் திண்ணம். எவ்வழியேனும் பொருள் தேடி சுசீலை உயிரைக் காப்பாற்ற வேண்டும். இவ்வாறாக உறுதி செய்தார்.

மனைவி மெய்க் களைப்பால் தூங்குகின்றாள். வைத்தியர் வைத்திய சாலைக்குள் வந்து பறபல சிந்தனையிலாழ்ந்து பரிதபித்திருந்தார். "குற்றாலயாத்திரையை மாற்றி வைத்தல் கொடிது. இனி வீண்போகும் ஒவ்வொரு நிமிஷமும் சுசீலையின் உயிரைக் கவர்ந்து செல்லும் இயமதூதனும். என் செய்வது! ரூபாய் நூறு வேண்டுமே. ஒரு லட்சம் ரூபாய்——ஐயோ! மகா பாதகம்! தெய்வமே! இதுவென்ன சோதனை! என்னை நம்பி உயிர்வாழும் ஏழையை உயிர் துறக்க விடவோ? பின்னர் எனக்கு யார் துணையுளர்? யான் உயிர் வாழ்ந்து பயன் யாது? வீண்! வீண்! சுசீலையில்லா வீடும் ஒரு வீடோ? சுடுகாடே. அவளை மீட்க உபாயம் யாது? என்னுயிரும் ஆகுக. அவளை மீட்பேன்" என மனந்தேறினார்.

இதற்குள் சிறுவனும் திரும்பிவந்தான். பண்டிதர் மருந்துப் பெட்டியைத் திறந்து, சில கடைச்சரக்குகளைத் தெரிந்தெடுத்து கல்வத்திலிட்டுப் பொடி செய்து கொண்டிருந்தார்.

அருணோதயமாயிற்று. பண்டிதர் ஒரு மூலையில் உறங்கிக் கிடந்த சிறுவனை யெழுப்பி ஒரு இலை மடக்கைக் கையிற் கொடுத்து செவியில் ஏதோ மந்திரித்து அனுப்பினர். "யாமார்க்கும் குடியல்லோம், எமனை யஞ்சோம்." என வெண்ணி இறுமாந்தார்.

இவ்வாறு சுமார் 10 நிமிஷநேரம் பண்டிதர் அடங்கா மகிழ்ச்சியால் ஆர்ப்பரித்திருக்க உள்ளறையில் ஒரு பரபரப் புண்டாயிற்று. பண்டிதர் ஆங்கோடிச் சென்றார். ஹா! ஹா! என்ன கொடிய காட்சி! பண்டிதரின் ஆருயிர்த் துணைவி சுசீலை 'விழித்த கண்ணும், திறந்த வாயும், விரித்த கூந்தலும், எறிந்த கையுமாய்ப் பிணமாய்க் கிடக்கின்றாள். பண்டிதர் இக் காட்சியைக் கண்ணுற்று, தொப்பென்று கீழே விழுந்தார். "கெட்டேனே! மதி கெட்டேன்! கதி கெட்டேன்! எனப் புலம்பினர். பின்னரெழுந்து சுசீலையின் குளிர்ந்த கரங்களைப் பற்றி இருகண்களிலு மொற்றி கண்ணீர் விட்டழுதார். "ஐயோ! உன்னுயிரைக் காக்க இன்னொருயிர்க்கு உலை வைத்தேன் அம்மட்டோ! மலையினும் பெரிதாம் ஓர் பாதகச் சுமட்டையும் என் தலை வைத்தேன். அம்மம்ம! என்னைப் போல் மதியிலிகளும் உளரோ? தீமை விதைத்தன்றோ நன்மை பெற எண்ணினேன். 'கெடுவான் கேடுநினைப்பான்' என்னும் நீதி என் மட்டில் எழுத்துப் பிசகாமல் உண்மையாயிற்று. இனி யிவ்வா றிருந்து இரங்கிப் புலம்புவதில பயன் யாது?" என்றெழுந்து, வீட்டுக்கதவைப் பூட்டி விட்டு, குப்புப் பாட்டி வீடு தேடி ஓடினர். வைத்தியரை அறியாதார் அவ்வூரில் ஒருவரும் இலையாதலின் அவரது துயரத் தோற்றத்தையும், மருண்டோடும விரைவையும் கண்ணுற்றோ ரெல்லாம், காரணமறியாது பற்பல விதமாய்ப் பேசலுற்றனர். பண்டிதரோ ஒருவர் மொழியும் கவனிக்கவில்லை. குடுமபி குதிங்கால் படவோடி குப்புப் பாட்டி வீட்டில் நுழைந்தார்.

குப்புப் பாட்டி பிணியாளியான பழனியப்ப முதலியார் கட்டிலண்டை நின்று கொண்டிருந்தாள். பண்டிதர் வீட்டினுட் சென்றதும் பாட்டி முகத்தைச் சினந்துநோக்கி, முகத்தில் ஆத்திரக் குறிகள் நடமாட நிற்க— "நான் அனுப்பிய சூரணம் கொடுத்தாயா" என்றார்.

பாட்டி.—அவரது பயங்கரத் தோற்றத்தைக் கண்டு மிகக் கலங்கி—"கொடுத்தேன்! கொடுத்தேன்!!"

பண்டி. "பாதகி! என் வாயில் மண் போட்டாய்!"

பாட்டி. "உம்—உம்—உம்மாணை கொடு—கொடு—த்தேன்"

பண்டி. சிந்தைகலங்கி, கோபாவேசங்கொண்டு "பாதகி! கொடுத்தையா?"

பாட்டி. "ஐயோ! உள்ளதைச் சொல்லுகிறேன்!"

பண்டி. "நீலி! உண்மையை ஒருவரிடமும் சொல்லாதே! என்னிடம் மட்டும் சொல்லு. இன்றேல் இருவரும் கெட்டோம்"

பாட்டி. "ஐயா! தங்கள் பையன் சூரணத்தை என் கையில் கொடுத்தான். முதலியார் அப்பொழுது தூங்கிக் கொண்டிருந்தார். விழித்த பிறகு கொடுக்கலாமென்றெண்ணி சுவர் மேல் வைத்திருந்தேன். என் காலக் கொடுமையால் காற்றலடிபட்டு கீழே விழுந்து சூரணமெல்லாம் மண்ணோடு மண்ணாயிற்று. முதலியார் விழித்தவுடன் வைத்தியர் மருந்தனுப்பினரா வென்று கேட்டார். ஆம் என்று சொல்லிக் கொஞ்சம் விபூதி யெடுத்துக் கொடுத்தேன். அவரும் அதைச் சாப்பிட்டுவிட்டுத் தூங்குகின்றார்.' என்று கதையை முடித்தாள்.

பண்டிதருக் குண்டான மனமகிழ்ச்சிக்கு அளவில்லை. பாட்டியோ பெரும் பாதகம் செய்தவள் போலப் பிரமித்து நிற்கின்றாள். பண்டிதர் 'ஆசான் விழுந்ததும ஓர் அடவுதான்' என்று தன் பாதகத்தை வெளிக்குவிடாது தன் குழப்பங்களுக்கெல்லாம காரணம் அவள் செய்த தப்பிதமே யென்று சாதுரியமாய்ப் பேசிக் கொண்டிருக்க, முதலியார் கண் விழித்துப் பண்டிதரைப் பார்த்து "ஐயா, நீங்கள் நல்லவர்கள். ஆனால் இது வரை எனக்குச் சிகிச்சை நடத்தினது போதும். நான் இன்று மாலை இவ்விடம விட்டுப் போவேன். அதோ அந்தப் பெட்டியைத் திறந்து மேலே யிருக்கும காகிதக் கூட்டை எடுத்துக் கொண்டு இப்பொழுதே போய்விடும். வந்தனம்." என்று சாவியை பண்டிதர் கையில் கொடுத்தார். பிணியாளி பேச்சின் உட்பொருள் ஒன்றும் பண்டிதருக்கு விளங்கவில்லை. பிணியாளியின மனோநிலைமையைப் பற்றி அவருடைய அண்ணன் தலை நாளிரவு சொன்னமொழிகளவருடைய ஞாபகத்துக்கு வந்தன. பெட்டியைக்

திறந்து கூட்டை யெடுத்துக் கொண்டு சாவியை முதலியார் கையிற் கொடுக்க, அவர் "சரி, சரி, போய்வாருங்கள்! வந்தனம்!" என்று கூறித் திரும்பிப் படுத்துக் கொண்டார்.

பண்டிதரும் வீடுநோக்கித் திரும்பினார். மனைவியின் தகனச்செலவுக்குக் கூட கையிற் காசில்லை. என் செய்வார்! ஏழை! எனினும் ஒரு பிராண ஹத்தி தன் தலைக்கேறாது நீங்கிற்றே எனமகிழ்ச்சியடைந்தார். தன் வாழ்நாள் முழுதும் வீணாகத் தன் மனைவி உயிர் நீங்கினமையை எண்ணி மனம் நொந்துகொண்டே வீட்டை யடைந்து வெளிக் கதவைத்திறந்து உள்ளறைக்குட் புக, ஆளரவங்கேட்டு கட்டிலண்டை சென்றார். உள்ளறையிலேனும் வைத்தியசாலையிலேனும் வேறொருவருமிலர். தலை நாளிரவு வரை எல்லையில்லா இன்ப வுணர்ச்சியைத்தந்து, இப்பொழுது அளவிலாத் துன்பவுணர்ச்சியை யெழுப்புகிற சுசீலையின் வதனத்தை உற்று நோக்கிக் கண்ணீர் வடித்துக்கொண்டே நின்றார். அம்மாதரசியை கனலி சான்றாய்க்கைப்பிடித்த நாள்முதல் அந்நிமிஷம் வரையுள்ள பூர்வசரித்திரங்கள் யாவும் அவருடைய மனதில் தோன்றலாயின. எல்லாவுணர்ச்சிகளு மற்று, பூர்வ சரித்திரச் சிந்தனையிலாழ்ந்து கற்சிலைபோல் நிற்க, சுசீலை மெல்லக் கண்விழித்து வாயைத்திறக்க எத்தனித்ததாய்ப் பண்டிதர் உணர்ந்தார். "சுசீலா!" சுசீலா! கண்மணி! என் கற்பகமே! எனக்கூவிக்கொண்டே சுசீலையின் மெல்லிய கரங்களை மெல்லப் பிடித்து நாடியை உணர்ந்தார். என்ன ஆச்சரியம்! நாடி மெல்ல மெல்ல ஓடிக்கொண்டிருக்கின்றது; உயிர் நீங்கவில்லை. "ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டன்றோ?" சுசீலை உயிர் துறந்ததாக வைத்தியர் எண்ணினது தப்பென்று இனிக்கூறவேண்டுமோ? வைத்தியசாலைக்குள் ஓடிச்சென்று சஞ்சீவித்தைலமெடுத்து வந்து சுசீலையின் இருபாதங்களிலும் சூடுண்டாமளவும் தேய்த்தார். உச்சியிலும் அவ்வண்ணமே தடவினார். சுசீலை உயிர் பெற்றாள்: பண்டிதர் மகிழ்வுற்றார். பின்னர் தான், முதலியார் கொடுத்த காகிதக் கூட்டின் ஞாபகம் வந்தது. கூட்டை உடைத்துப் பார்க்க ஒரு கடிதமும் 10,000 ரூபாய்க்கு ஒரு நோட்டும் இருந்தன. கடிதத்தில் பின்வருமாறு வரையப்பட்டிருந்தது.

"பண்டிதரே, நான் ஒரு பித்தன், இன்று 10 மணிக்கு என் ஆஸ்திகளை யெல்லாம் பற்பல தருமஸ்தாபனங்களுக்குப் பகுத்துக்கொடுத்து "உவில் (will) எழுதப் போகிறேன். தங்களுடைய தருமசிந்தனையைப்பற்றி நான் கேட்டிருக்கிறேன். ஆதலால் தங்களுக்கும் ஒருலட்சம் தரும்படி "உவில்லில்" எழுதுகிறேன். இப்பொழுது இத்துடனிருக்கும் 10,000 ரூபாயையும் பெற்றுக்கொள்ளுங்கள். பாக்கி ரூபாய் ஒருமாதத்துக்குள் தங்களிடம் ஒப்புவிக்கப்படும்."

வந்தனம், பழனியப்பமுதலி.

பண்டிதர் மனத்தில் எழுந்த உணர்ச்சியை வாசிப்போர் ஊகித்தறிந்து கொள்ளட்டும். "தெய்வத்திருவருளின் செயலை யுன்னியுன்னி ஆனந்தக் கூத்தாடினார். அடாத செயல் செய்ய இனி ஒருபொழுதும் துணியேனென்று சத்தியம் செய்தார்.

சுசீலையும் பண்டிதரும் குற்றாலத்தில் 6 மாதம் தங்கியிருந்தபின்னர் சுசீலை பூரணசுகமடைய இருவரும் இப்பொழுது ஒரு ஆண்மகவைப் பெற்றெடுத்து தன் பூர்வவிருத்தாந்தங்களைப்பேசி மகிழ்ந்து, சர்வேசன் திருவருளை வாழ்த்திப் பரமானந்தமாய் வாழ்ந்திருக்கின்றனர்.

S. முத்துசுவாமிப் பிள்ளை.

சித்திரை திருநாள் திருவிளையாடல்கள்.

:o:

நமது இளவரசர் பெருமானாகிய சித்திரை திருநாள் திருமேனியின் பாலவிளையாடல்களையும், அவைமூலம் வெளிப்படும் திருமேனியின் புத்திதீட்சண்ணியத்தையும் அறிவதற்கு ராஜபக்தர்களான திருவிதாங்கோட்டாரெல்லாம் வெகு ஆவலுடன் காத்துக்கொண்டே இருப்பார்கள். நமது இளவரசர் திருமேனிக்கு இன்னும் ஐந்து திருவயது பூர்த்தியாகவில்லை. எனினும் சுவாதிதிருநாள், ஆயில்லியம் திருநாள், விசாகம் திருநாள் முதலிய ராஜபண்டிதர்கள் அவதரித்த திருவிதாங்கோட்டு அரசகுடும்பத்துக்கு இயல்பாகவே அமைந்துள்ள விசேஷஞானம், நமது இளவரசரிடத்து இப்பொழுதே பிரகாசிக்கத்தொடங்கி இருக்கிறது.

நமது இளவரசருக்கு அந்நியருக்கடங்கும் குணம் அவ்வளவு இல்லையானாலும், நமது ஸ்ரீமூலம் திருநாள் மகாராஜா திருமேனியின் நாமத்தைக்கேட்டால், தட்

சணமே கைகட்டி வாய்புதைத்து அடக்க ஒடுக்கமாய் நின்றுகொண்டு "அம்மாமன், அம்மாமன்" என்று கற்பிக்கத் தொடங்குவாராம். தாய்தந்தையரிடத்தும் மிகவும் அன்புடையவர். சென்ற சில வாரங்களுக்கு முன் நமது பெரியராணி கொல்லத்துக்கு எழுந்தருளியபொழுது நடந்த ஒரு சம்பவம் இதற்கு ஒரு நல்ல திருஷ்டாந்தம். கொல்லம் அரண்மனையை அடுத்தவுடனே பெரியராணி வண்டியிலிருந்து இறங்கி அரண்மனைக் குள்ளே எழுந்தருளப் பாவித்தார். ஆனால் நமது இளவரசர் எழுந்தருளுவதற்கான எத்தனம் ஒன்றும் காட்டவில்லை. உடனே பெரியராணி "நமக்கு அரண்மனைக்கு எழுந்தருளலாம்" என்று கற்பித்தருள உடனே இளவரசர் "அச்சன் (தந்தை) வரவில்லையே. வந்தவுடன் போகலாம்" என்று கற்பித்தாராம். அப்படியே அச்சன் வரும் வரைக் காத்திருக்கவும் செய்தாராம்.

ஒருநாள் இளவரசர் அரண்மனைவாயிலில் 'காட்டு' நிற்கிற காவலாளியிடத்திலிருந்த துபாக்கியை வாங்கித் தன் தோளில்வைத்து, படைவீரனைப்போல "அற்றன்ஷன்" நின்றாராம். உடனே தந்தையாகிய இளைய கோயில் தம்பிரான்—"திருமேனி இந்தத் துப்பாக்கியை வாங்கக்கூடாது. திருமேனியைக் காப்பதற்காக இந்தக் காவலாளிகள் அதை வைத்திருக்கிறார்கள்" என்று சொல்ல, "அப்படியா?" என்று இளவரசர் கற்பித்துவிட்டு, துப்பாக்கியை படையாளியிடத்துக் கொடுத்துவிட்டாராம்.

இளவரசருக்கு, படையாளிகள் "டிரில்" சமயத்து உபயோகப்படுத்துகிற அநேக வார்த்தைகள் தெரியுமாம். இளவரசர் சில சமயத்து "பான்று" கொட்டுகிறவரிடத்துக்கு எழுந்தருளி அவர்களைக் கொண்டு "பான்று" கொட்டச்சொல்லுவது வழக்கம். நமது மகாராஜா திருமேனியின் திருநாளன்று கொட்டும் "பான்று" கேட்க இளவரசருக்கு மிகப் பிரியம். வயோதிகரான சில 'பட்டாள'ச் சேவகரிடத்து சாட ஆடக் கற்பிப்பதும் அவைகளைப் பார்த்து மகிழ்வதும் இளவரசர் திருவிளையாடலில் ஒன்று. ஒரு நாள் ஒரு சேவகனிடத்து ஆடவும் சாடவும் கற்பித்தருளினர் அவனும் கற்பனைப்படி செய்தான். மறுநாளும் அப்படியே கற்பிக்க, தலைநாளிற்போல சாடினன். உடனே இளவரசர் "இதெல்லாம் பழைய சாட்டம் எனக்குப் புதுச்சாட்டம் பார்க்கவேண்டும்" எனக்கற்பிக்க, புதுச்சாட்டமறியாத சேவகன் பரக்கப் பரக்க விழித்தானும்.

ஒரு நாள் இளவரசருக்கு ஏதோ மருந்து கொடுக்கப்பட்டது. மருந்தை வாயில் விட்டவுடன் கைப்புள்ளதாயிருக்கக் கண்டு குடிக்க முடியாதென்று கற்பிக்க, டாக்டர் "தினம் குணப்படக் கைப்புள்ள மருந்தே குடிக்க வேண்டும்" என்று விடையளித்தார். இளவரசர் மறுவாக்குரைக்காது மருந்தைக் குடித்தார். பின்னொரு நாள் ஏதோ மருந்து கொடுக்கப்பட்டது. அதை வாயில் விட்டவுடன் தித்திப்பாயிருக்கக்கண்டு "டாக்டர் எங்கே" என்று கற்பிக்க, டாக்டரும் வந்தார். உடனே இளவரசர் "இந்த மருந்து தித்திப்பாயிருக்கிறது; இதைக் குடித்தால் நோய் மாறாது. கைப்புள்ள மருந்து வேண்டும்" என்று திருவாய் மலர்ந்தருள, இதன் கருத்தை உணர்ந்த டாக்டர் இந்த நோய்க்குத் தித்திப்பான மருந்து தான் உட்கொள்ளவேண்டும் என அறிக்கை செய்ய, இளவரசர் மறுபேச்சின்றி மருந்து குடித்தருளினர்."

உத்தராம சரிதம்.

அங்கம் 1.

15-வது பக்கத் தொடர்ச்சி.

—:0:—

அஷ்டா;—(ஆசனத்தமர்ந்து) ஆம்-தேவி! குலகுருவான பகவான் வசிஷ்டர் உன்னிடம் இதைச சொல்லச் சொன்னார். தேவி நிலமாதே நின்னை யீன்றாள்; நின் தாதையாகிய சனகரோ பிரமன் ஒப்பார். எக்குலத்திற்கு சூரியபகவானும் இப்பொழுது நாளும் குருவாய் அமைந்துளோமோ அக்குலமே நின் புகுகுலம். ஆதலால் யான் எந்நன்மை வேண்டி நின்னை வாழ்த்தப் போகிறேன். கேவலம் வீரனைய ஓர் ஆண் மகவைப் பெறுவாயாக.

ஸ்ரீராம;—பெரும் பேறடைந்தோம். சாமானிய நல்லோர் பலரும், வருவதறிந்து முன்னு[illegible]த்துப

போவர். ஆனால் ரிஷிபுங்கவர் வாக்குக்கிணங்கவே காரியம் நிகழும்.

அஷ்டா:—பகவதியாகிய அருந்ததியும், உன் மாமிமாரும் சாந்தையும் பின்னும் பின்னும் உன்னிடஞ் சொல்லுமாறு வேண்டிக் கொண்டனர்: "சூல் கொண்ட மாதர் ஆசைக்கேற்ப இவள் எதுவேண்டினும் அவாப்படின், அவ்வவாப் பண்டம் அப்பொழுதே அளித்தல் வேண்டும்" என.

ஸ்ரீராம:—வேண்டிய வேண்டியாங்களிப்பேன்.

அஷ்டா:—காத்தூன் நாயகரான ரிசியசிருங்க முனியும் தேவியிடங் கூறுமாறு வாக்கருளினர்: "மகளே! நீ வயிறு வாய்த்திருத்தல் பற்றி உன்னை அழைத்து வரவில்லை. நின் பொழுதுபோக்கு வேண்டியே மகனை ராமபத்ரனையும் அவனி வைத்தினோம். அதனால் ஆயுள் வாய்ந்த நின்னை மடி நிறைந்த குழவியுடன் கண்டுகொள்வோம்."

ஸ்ரீராம:—(உவப்பும் நாணும் விரவிய புன்முறுவலுடன) அங்ஙனமே யாகுக. பகவான் வசிஷ்டமாமுனி என்னிடஞ் சொலலுமாறு ஒன்றும் பகரவில்லையோ?

அஷ்டா:—கேளும். "மாப்பிள்ளை மனைக்கண் நிகழும் வேள்வியால் நாம் இங்கு கட்டுண்டுளோம். நீயோர் பாலன்: நினக்கு அரசு புதுப்பேறு; குடியோம்புதல் நின் கடமை; குடியுயரக் கோனுயரும், புகழ் வாய்க்கும்; அப்புகழே நின் குலத்துக்கோர் பெருந்தனம்."

ஸ்ரீராம:—பகவானுடைய மைத்திரா வருணியின் விதிக்கு நம்மால் விலக்கு முண்டோ? குடிகளுக்கு யானியற்றும் பணிவிடை கருதி, நட்பு, அருள், இன்பம் இவையன்றி சன்கன் மாமகளை யிழக்கினும் என் மனம் துயர் உறாது.

ஸீதை:—இது குறித்தல்லவோ தங்களை ரகுகுல திலகரெனகிறார்கள்.

ஸ்ரீராம:—பாரங்கே! அஷ்டா வக்கர முனிக்கிருக்கும் ... மாற்றுக.

அஷ்டா:—(எழுந்து நடந்து கொண்டு) குமாரன் இலக்குமணன் வருகின்றான். (போதல்)

இலக்குமணர்:—(பிரவேசித்தல்) வெற்றிபெறுக வெற்றிபெறுக! உத்தம! அர்ச்சுனனென்னும் சித்திர வேலைக்காரன் நம் நோக்கப்படி தேவரீர் சரித்திரத்தை இவ்வீதியில் வரைந்துள்ளான், அதனைத் தாங்கள் பார்க்கவேண்டும்.

ஸ்ரீராம:—ஏக்கம் மேவிட்ட தேவி இன்புறுதற்காய காரியம் உனக்குத் தெரிந்ததே. ஆனால், எதுகாறும் வரையப்பட்டுள்ளது?

இலக்:—தூய்மை விளக்குவாள் தேவி தீப்பாய்தல் வரை.

ஸ்ரீராம:—அது என்ன பாப நிமித்தமோ! பிறவித் தூயாளாய இவளுக்குப் பிறபொருளால் வாய்க்குந் தூய்மையென்னை? நீரும் நெருப்பும் தன்னாலே தூயனவாக, பிறபொருளால் தூயனவாகுதல் வேண்டா. வேள்விச்சாலையிற் றோன்றிய தேவி! பொறுத்துக்கொள்வாய்; இவ்வசை நின்னையுளளவே. கேடுற்றேனும் குடியோம்பல் கடனே. இது வேண்டியே அன்றுயான் அச்சுடுசொற் கூறினேன், அஃதுன்பொருட்டு கூறத்தகாததே. முடிமீதணியத்தகு நறுமலரையானென்னடி கொண்டல்லவா மிதித்தேன்.

ஸீதை:—அன்புடையாய்! அது போகட்டும். அது போகட்டும். நாம் போய் சித்திரங்களைப் பார்ப்போம் (எனவெழுந்து நடத்தல்.)

இலக்:—இதுதான் அச்சித்திரம்.

ஸீதை:—பார்த்தேன். இவர்கள் யார்? நெருக்கத்திடைப்பட்டுமேனின்று அண்ணலை வாழ்த்துவபோல்வர்.

இலக்:—தொடுக்கவும் மடுக்கவுமாய மர்மச்சொற்கள் வாய்த்த ஜிரும்பகச் சரங்களிவை. பகவானுடைய கிருசாசவனிடமிருந்து விசுவாமித்திரரிடம்புக்க இவைகளை அம்முனி தாடகை வதைக்காலத்தில் அன்புடனண்ணனுக்களித்தார்.

ஸ்ரீராம:—தேவி! இத்திவ்ய சரங்களை வணங்குக; தொன்மை மிக்க பிரம்மாதி தேவர்கள் வேதங்களைக்காக்க ஆயிரக் கணக்காய வாண்டு தவஞ்செய்த பின்னர் தாங்கள் செய்த தவச்சுடரே இவ்வடிவெடுத்ததாகக் கண்டனர்.

ஸீதை:—இவைகட்கு நமஸ்காரம்.

ஸ்ரீராம:—இப்பொழுது இவைகள் எவ்வாற்றானும் உன் சிசுவைச் சாரும்.

ஸீதை:—யான் பெரும் பேறடைந்தேன்.

இலக்:—இது தான் மிதிலைக் காட்சி.

ஸீதை:—அஹோ! இன்னே மலர்ந்த குவளையன்ன, சாமளாங்க, காந்தி பொருந்திய, மெல்லிய, வனப்புடை, திரண்ட மேனியின் சுந்தரத்தால் ஆச்சரிய முற்று அசைவற்றிருக்கும் தந்தையால் காணப் பெற்ற சோபையுடனும் முகவழகுடனும் விளையாட்டாய் சிவசாபத்தை முறித்த வீரனை வரைந்துளான்.

இலக்:—குணமிக்காய்! பார்! பார். நின் தந்தையாய சனகன் தன் குலகுருவாய சதாநந்தருடன் வசிஷ்டாதிய சம்மந்திகளை உவப்போடு உபசரிக்கின்றனர்.

ஸ்ரீரா:—இது நோக்கத்தகுவல். சனகன் குலத்திற்கும் ரகு குலத்திற்கும் நிகழ்ந்த இச்சம்மந்தம் யாருக்குத்தான் இன்பம் ஊட்டாது? இவ்வதுவையிற் கொடுத்தாரும் கொண்டாரும் கௌசிகரே.

ஸீதை:—அத்தருணத்தில் வதுவைக் காப்புடன் கோதான சுபகாரியம் நடத்திய உடன்பிறந்தாராய நீங்கள் நால்வருமே காணப்பெற்றது. அஹோ! அந்த இடத்திலே அந்த சமயத்திலே நான் இப்பொழுது இருப்பதாக எனக்குத் தோற்றுகிறது.

ஸ்ரீரா:—அது மெய்யே! பெருவிழாவே உருவெடுத்ததொத்ததும், அந்த மிருதுவ்கணமிடப் பெற்றதும் ஆன நின் கரத்தை, யான் களிப்புற சதாநந்தர் என் கரமீது வைத்தது இக்கணம் நிகழ்வது போல் எனக்குத் தோற்றுகிறது.

இலக்:—இது உத்தமியே; இதுவும் உத்தமியான மாண்டவியே. இது எம்பிராட்டியாய சுருதகீர்த்தியே.

ஸீதை:—தகைசால் தம்பி! பிறிதோர் அரிவை யார்?

இலக்:—(உள்ளூற நாண மேவிட்டபுன்முறுவலுடன்) ஓ! உத்தமி ஊர்மிளையை அல்லவா கேட்கிறாள். இருக்கட்டும், மற்றொன்றைக் காட்டுவல். (வாய்விட்டு) உத்தமி! பாரும். இது பார்க்கத்தக்கதே; இதோ பகவான் பரசுராமர்.

ஸீதை:—(அங்கங்குலைந்து) நான் நடுக்கமுற்றேன்.

ஸ்ரீரா:—மாமுனியே! தங்கட்கு நமஸ்காரம்.

இலக்:—உத்தமி! நோக்கும். இதோ இவரை அண்ணல்——(எனக் கூறுமுன்னர்).

ஸ்ரீரா:—(கையாலமர்த்தி) எம்பீ! இன்னும் நோக்கத்தக்கது சாலவுமுண்டு, அப்பாலுள்ளதைக் காண்பி.

ஸீதை:—(அன்போடும் ஆதரத்தோடும் ஸ்ரீராமனைக் கண்ணுற்று) மேலோய்! இக்கதை அடக்கத்தாலல்லவா தங்கள் பெருமை விளங்குகிறது.

இலக்:—(சித்திரத்தை நோக்கி) அயோத்தியில் வந்ததாமே இது.

ஸ்ரீரா:—(கண்ணீர் வார்த்து) கஷ்டம். இப்பொழுதும் எனக்கு ஞாபகமே. அன்று தந்தை வாழ்ந்தார்; யாம் புதுமணம் புரிந்தோம்; நஞ்சுகம் வேண்டியே நந்தாய்மாரும் வாழ்ந்தனர். அந்தக் காலம் கழிந்துவிட்டது. அக்காலம் இச்சானகியும் பற்கள் விழுந்ததாலே இடையில் திரும்பவுமெழு பற்களோடு இடையிடையே தொடுத்த முகைபோன்றிலங்கு முகமலர்ச்சியுடன், மென்மையுறு மென்மையாய் நிலாவெறித்தவாங்கு இயற்கையானே யமைந்த கட்டழகு வாய்ந்து தன்னினிமைசே மேனியால் என் மனத்தைக் கொள்ளைகொண்டாள்.

இலக்:—இதுதான் மந்தரை சூழ்ச்சி.

ஸ்ரீரா:—(சடிதியிற் பிறிதொன்றைக் காண்பித்து) தேவி! சானகி! இதுதான் அவ்வேடல் மரம். இதன் கீழே பண்டு சிருங்கிபேரபுரத்தன்பனான வேடர் தலைவன் நம்மை யெதிர்கொண்டனன்.

இலக்:—(சிரிப்புடன் உள்ளூற) ஓ! நடுத்தாயின் வரலாற்றை அண்ணல் விட்டுவிட்டார்.

ஸீதை:—அஹோ! இதுதான் சடைபின்னிய சந்தர்ப்பம்.

இலக்:—முன்னர் இக்ஷ்வாகு வம்சத்தாராய புனைமுடி மன்னரெல்லாம் முதியராயபின் தம்மக்களை வேண்டி நாடுதுறந்து சடைமுடியணிந்து கானகம் ஏகினர். நம்மையன்றே இளமையிலேயே அப்புனிதம் நாடினர்.

(தொடரும்)

பற்பல குறிப்புகள்.

ஆகாயமளாவிய வீடு: அமெரிக்காவில் 600 அடி உயரமுள்ள வீடொன்றிருக்கின்றது. அதில் 50 அடுக்கு மெத்தைகளிருக்கின்றனவாம்.

வருஷப் பிறப்பு மூடாசாரம்: வடகடலிலுள்ள (North Sea) ஒரு தீவில் வசிக்கிற ஜனங்களுக்கு ஒரு விசேஷ ஆசாரமிருக்கிறது. வருஷப்பிறப்பன்று காலமே அவர்கள் முதலாவது பெண்களை பார்க்கக்கூடாதாம். காலையில் மூட்டின தீ அன்று சாயங்காலம் வரை அணைந்து போகவுங் கூடாதாம்.

தக்காளியின் ஆகாரத்தன்மை: டாக்டர் கெல்லாக்கு (Dr.Kellogg) என்பவர் தக்காளி நல்ல ஆகாரத்தன்மையுள்ளதென்றும், தேகத்தில் இரத்தமில்லாதவர்களுக்கு இதில் அதிகம் இரும்பின் ரசமிருப்பதால் இதை சாப்பிடுவது நலமென்றும் சொல்லியிருக்கிறார். சாதாரணமாக இரத்தபுஷ்டிக்காக உபயோகித்துவருகிற மருந்துகளைப்பார்க்கிலும், தேகத்துக்கு, இரும்பை ஊட்டுகிறதற்கு, இது மிக மேன்மையானதாம்.

ஜலதோஷத்துக்கு சிகிச்சை: ஜலதோஷத்தினால் கஷ்டப்படுகின்றவன் வஸ்திரங்களினால் தேகத்தைச் செவ்வையாய் மூடிக்கொண்டு, அதிவேகமாய், தேகம், நன்கு வியர்க்கிறதுவரை நடந்துவிட்டுத் திரும்பவந்து கொஞ்சம் வென்னீரையாவது 'லெமொனெ'டையாவது, குடித்துவிட்டு மூடிப்படுத்துக் கொள்ளவேண்டும். தலைக்கன முண்டாயிருந்தால், கொஞ்சம் சூடத்தை, கொதிக்கிற ஜலத்திலிட்டு அதின் ஆவியை நாலைந்து நிமிஷம் உட்கொள்ளவேண்டும். ஆவி வெளியில் போகாமலிருக்கிறதுக்கு கனமுள்ள காகிதத்தைக் கொண்டு வாயகன்றதும் மூடி சிறிதுமான குழலொன்று செய்து கொண்டால் போதும். ஜலதோஷம் ஸாதாரணமாக இந்த சிகில்சையினால் குணப்படுமாம்.

சிலந்தியின் இணக்கம்: சிலந்திப்பூச்சியை செல்வமாக வளர்த்தவர்கள் அநேகருண்டு. பித்தோவன் (Bethoven) என்பவர் எட்டுவயதுபிராயத்தில் சாரங்கி கற்றுக்கொள்ளும்போது, அந்த அறையிலுள்ள ஒரு சிலந்தி பதிவாக அவருடைய கானம் கேட்க வந்து கொண்டிருந்தது. அது, அதினுடைய வலையை விட்டிறங்கி வந்து, அவருடைய கையிலும் விரலிலும் ஏறியிருந்து சங்கீதம் கேட்கின்றதுமுண்டு. பங்கனினி (Panganini) என்கிற சங்கீதவித்துவான் அவருடைய சங்கீதம் கேட்கிறதுக்காக பதிவாய் வந்து கொண்டிருந்த ஒரு சிலந்தியை அழித்திருக்கிறார்.

டென்மார்க்கு அரசனான சாரல்ஸ் இரண்டாவன் (Charles II) 1531-ல் (Frederick I) என்பவரால் சிறைச்சாலையில் வைக்கப்பட்டார். அவ்விடத்தில் அவர் ஒரு சிலந்தியுடன் சங்காத்தங் கொண்டார். அந்த ஜந்து அவருடைய கையிலிருந்து ஆகாரம் உட்கொண்டிருந்ததாம்.

சிவப்பு, பச்சைமுதலிய நிறமுடைய சேலைகளையும், பட்டாடைகளையும், உடுப்புகளையும், அநேகர் வெயிலில் உலரவிடுகிறார்கள். இதனால் நிறம் மங்கிப்போக இடமாகிறது. வெயிலில்லாத நிழலில் உலரவிட்டால் நிறம் மங்காது.

பறக்கும் அணில்களைப் போலவும், மீன்களைப் போலவும், பறக்கும் தவளைகளுமிருக்கின்றன. ஜாவாத்தீவிலுள்ள 'பறக்குந்தவளை' பசுமைநிறம் உடையது. அதன் வயிறு வெண்மையாகவும் அதன் இறகு போன்ற விரல்களுக்கிடையிலுள்ள தோலி மஞ்சள் நிறமாகவுமிருக்கின்றன. அது புழுக்களைத் தின்கிறது. பகற்காலங்களில் செடிமறைவில் அசையாமலிருந்து யாராவது தன்னை உபத்திரவித்தால் வேறொரிடம் சேர்ந்து பதுங்கியிருக்கும்.

டாக்ற்றர் பால்கிலாகர் என்ற வினிஸ் வைத்தியர் மேல்மீசை வைத்துக்கொண்டால் தலைநோய், தடுமல், இருமல் முதலிய நோய்கள் உண்டாகாவென்றும் மேல்மீசை இல்லாதவர்களுக்கு இந்நோய்கள் இ[illegible]ய அணுகுமென்றும் அபிப்பிராயப்படுகிறார். இ[illegible]நோய்களுடையவாகளாக அவர் சிகிற்சித்த 500 பே[illegible]ரில் 420 பேர் மீசையில்லாதவர்களாம். பெண்களுக்கு மீசையில்லாவிட்டாலும் அவர்கள் புருஷர்களைப்போல் அவ்வளவு அதிகமாக வெளியில் நடமாடாததினால் அவர்களை இந்நோய்கள் அதிகமாய்ப் பிடிக்கவில்லையாம்.

ஆசியா ஐரோப்பாக் கண்டங்களிலுள்ள அநேக அநாகரீக நாடுகளில் குழந்தைகள் பிறந்தவுடன் உப்பு நீரில் தோய்த்துவைப்பது வழக்கமாக இருக்கிறதாம். இதனால் குழந்தைகளுக்கு பலமும் ஆரோக்கியமும உண்டாகுமென்பது அந்நாட்டுத் தாய்மாரின் நம்பிக்கை. அர்மீனிய நாட்டார் குழந்தைகளின் உடல் முழுதும் உப்பை அரைத்துப் பூசி மூன்றுமணி நேரம வைத்திருந்து பிறகு வென்நீரால் கழுவிவிடுவார்களாம். ஆசியா மைனர் தேசத்திலுள்ள சில நாட்டார்கள் ஒருநாள் முழுதும் அப்படி வைப்பது வழக்கமாம். கிரேக்கரும ஜெர்மனியரும் இப்பொழுதும் குழநதை பிறந்த உடன் உப்புநீர் தெளிக்கும் வழக்கத்தை அனுஷ்டித்து வருகிறார்களாம்.